ரான் நெ· 15. விலை 2 அணு. REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 2-8-53 | இதழ் 5

புத்தி தடுமாற்றம்! புலன்கள் கோளாறு!

வேதாளம் முருக்க மரத்தில் ஏறிக்கொண்டது

குல்லுகபட்டரின் குயுக்தி

[அடிகள்]

"எது சரி, எது தப்பு என்பது இப்போதுள்ள பிரச்னை அல்ல. திட்டத்தை எப்படி நடத்தி வைப்பது என்பதுதான் இப்போதுள்ள பிரச்னை."

*

"மக்களுக்கு எது நன்மை, எது நன்மையில்லை என்பதைக் கவனித்துத்தான் சர்க்கார் காரியம் செய்யவேண்டும்"

இந்த இரண்டு வாசகங்களையும் கூறியவர் யார் என்று நினைக்கிறீர்கள்? யார் என்று நினைப்பதற்கு என்ன இருக்கிறது! இந்த இரண்டு வாசகங்களையும் கூறியது ஒரு போதும் ஒருவராய் இருக்கமுடியாது—நிச்சயமாக வெவ்வேறு கருத்துக்களைக்கொண்ட இரண்டு பேர்தான் அவ்விதம் கூறமுடியும்—கூறியிருக்கவேண்டும். ஏனென்றால் மேலே கூறப்பட்டிருக்கும் இரண்டு வாசகங்களையும் ஒப்பு நோக்கிப் பார்க்கும்போது, அவை, ஒன்றுக்கொன்று துளியும் பொருந்துவதாகக் காணப்படவில்லை. முதல் வாசகத்தைக் கூறிய நபர், இரண்டாவது வாசகத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் கூறியிருக்க முடியாது. எனவேதான், அந்த வாசகங்களைக் கூறியவர் யார் என்று கேட்காமல், யாரரால் கூறப்பட்டதெனக் கேட்டிருக்க வேண்டும் என்று கேட்கத் தோன்றும், உங்களுக்கு!

எந்தப் பைத்தியக்காரனும் தன்னுடைய மூளையை இந்த அளவு மோசமான நிலைக்குக் கொண்டு போகமாட்டான், பைத்திரக்காரன் கூட, ஏதோ தன்னுடைய வாயில் வந்ததையெல்லாம் உளறிக்கொண்டு போவானே யொழிய, அதிலும், வாயினால் உச்சரிக்கக்கூடாத சொற்களை......வெளியே சொல்லக்கூடாதென்ற முன்னெச்சரிக்கையோடு பேசுவானே யொழிய, ஒருமுறை சொன்னதை மறுமுறையும், மீண்டும் மீண்டும் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருப்பானேயொழிய," கூறியதை மாற்றியும், மறந்தும் கூறும் மதிக்குறைவு அவனுக்குக்கூட ஏற்படவேஎற்படாது.

ஆனால், அந்த இரண்டு வாசகங்களையும் கூறியவர், ஒரே ஆசாமிதான் என்று நான் கூறினால், நீங்கள் ஆச்சரியத்தால் என்மீது ஆத்திரங்கொள்ளாமல் இருக்கமாட்டீர்கள். "என்னய்யா, பைத்தியக்காரனின் நிலை இப்படி இருக்குமென்று விளக்கினீர், இப்போது பார்த்தால், நீரே ஒரு பைத்யக்காரன்போல் பேசுகிறீரே" என்றுகூடக்கேட்கத் தோன்றும், உங்களுக்கு! நான் இவ்விதம் கூறுவதைக் கண்டு, நீங்கள் என்னைக் 'கீழ்ப்பாக்க'த்திற்குப் போகும்படி கூறினாலும், நான் என்னவோ, அதனை உறுதிப்படுத்தும் நிலைமையில்தான் இருக்கிறேன் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், அந்த இரண்டு வாசகங்களையும் கூறியவர், ஒருவரேதான் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும் என்பதால். அதுவுமன்றி, அப்படிக் கூறியவர், அடிக்கடி கீழ்ப்பாக்கப்பக்கம் போய் வருபவர் என்றபோதிலும், அவருக்குப் புத்தியில் தடுமாற்றமோ, புலன்களில் கோளாறோ இல்லை என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். அதுவேயுமன்றி, அந்த இரண்டு வாசகங்களையும் கூறியவர், ஒரு வாசகத்தை ஒரு காரியத்துக்காகவும், இன்னொரு வாசகத்தை இன்னொரு காரியத்துக்காகவும் மேற்கோளாகக் கூறினார் என்றாலாவது, யோசித்துச் செய்யவேண்டிய காரியங்களும், யோசியாமலேயே கண்ணையும் கருத்தையும் மூடிக்

காங்கிரஸ் பசுவும் கன்றுக் குட்டிகளும்

கொண்டு செய்யவேண்டிய காரியங்களும் இருக்கின்றனவே தவிர (அப்படியொன்றுமில்லை) என்று வாதத்துக்காவது ஒப்புக்கொள்ளலாம். ஆனால், நிலைமை அப்படியும் இல்லையே!

ஒரு காரியத்தை அடிப்படையாகக்கொண்டே அந்த இரண்டு வாசகங்களும் கூறப்பட்டுள்ளன. அப்படியானால், அதில் கூடத் தவறிருக்கமுடியாதே என்று நீங்கள் கருதுவீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். எப்படியென்றால் ஒரு காரியம் ஒரு காலத்தில் ஒருவிதமாகவும், இன்னொரு காலத்தில் இன்னொரு விதமாகவும் செய்யப்படுவதுண்டு. அந்தக் காரியத்தைச் செய்து முடிப்பதற்காகக் கையாளப்படும்முறைகளும் மாறுபடுவதுண்டு. உதாரணமாக, ஒற்றையடிவழி, விரிவான மண்பாதையாகி, கிராவல் ரோடாகி, கல் ரஸ்தாவாகி, தார்ரோட்டாவதுபோல், ஒரே காரியத்துக்காகக் கையாளப்படும் முறைகள் காலமாறுதலுக்கேற்ப மாற்றப்படுவதுண்டு என்று நீங்கள் வாதாடலாம். ஆனால், நிலைமை அப்படியும் இல்லையே!

ஒரு காரியத்தைச் செய்துமுடிப்பதற்காகக் கூறப்பட்டுள்ள இரண்டு காரணங்களும் ஒரே ஆசாமியால் மட்டுமல்ல — காலத்திலும் சிறிது மாறுதல் ஏற்படாத நிலையிலேயே கூறப்பட்டுள்ளன. இந்தக் கால மாறுதல், ஆண்டுக் கணக்கிலோ, மாதக்கணக்கிலோகூட இல்லை! வெறும் நாட்கணக்கிலேதான் இந்த மாறுதல் ஏற்பட்டுள்ளது. எண்ணிப் பதினைந்து நாட்களுக்குள், 'ஒரு காரியத்தை யோசியாமலே செய்! யோசித்தே செய்!'' என்ற மாறுதலை "அவர்'' செய்துள்ளார். அதிலும், ஒரு காரியத்தை யோசியாமலே செய்யவேண்டுமென்று சொல்லியவர், அதோடு நின்றுவிடாமல், மேலும் அதிதீவிரமாகச் சென்று,

> "முதலில் காரியத்தை நடத்திவிட்டுப் பின்னர் அதன் விளைவுகளைத் தெரிந்துகொள்ளலாம்''

என்று பேசியும்விட்டார். அப்படிப்பட்ட அவர்தான் பதினைந்து நாட்களுக்குள், யோசனை செய்யாமல் எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது'' என்று உபதேசம் செய்கிறார் என்றால், அவரைப்பற்றி என்ன எண்ணுவீர்கள் என்பது மட்டுமல்ல, அவர் யார்? இன்னுமா — நாட்டில் — மக்கள் நடுவில் நடமாடிக்கொண்டிருக்கிறார் என்றும் கேட்பீர்கள். இன்னும், அவரது 'அற்புத அறிவை'ப்பற்றியுள்ள ஒரு உண்மையை எடுத்துக் கூறினால், அவரைப்பற்றி நீங்கள் முடிவு செய்வது ஒரு புறமிருக்க, இப்படி எழுதும் என்னைப்பற்றிக்கூடத் தவறாக எண்ணிவிடுவீர்களோ என்ற அச்சம் எனக்கு உண்டாகிறது.

எந்தக் காரியத்தை அவர் யோசியாமலே செய்யவேண்டுமென்று கூறினாரோ, பதினைந்து நாட்களுக்குப் பின்னர், அதே காரியத்தை யோசித்தே செய்யவேண்டுமென்று கூறுகிறார் என்றால், ஏதோ அவர், முன்பு தவறாகக் கூறிவிட்டார், பிறகு அந்தத் தவறைத் திருத்திக்கொண்டார் என்றுதானே நீங்கள் நினைப்பீர்கள். எனவேதான், இப்படி எழுதும் என்மீது தவறாக எண்ணுவீர்கள் என்று குறிப்பிட்டேன்.

ஆனால், நிலைமை என்ன தெரியுமோ? குறிப்பிட்ட அந்தக் காரியம், 'பழையபடியும் வேதாளம் முருக்க மரத்தில் ஏறிக்கொண்டது' என்பது போல்,

> "யோசியாமலேயே செய்யுங்கள்''

என்பதை வலியுறுத்த, 'கையாட்கள்' 'பிடியாட்கள்' என்ற ரகத்திலுள்ள சிலரையும், ஆட்சியில் இருப்பவர்களை அண்டிப் பிழைப்பதைத் தவிர வேறு வழியற்ற ரகத்திலுள்ள பத்திரிகைகள் சிலவற்றையும் தனக்கு ஆதாரவாக வைத்துக்கொண்டு, தம்முடைய அதிமேதாவித்தனத்தைக் காட்டப் பார்க்கிறார்.

இப்பொழுது தெரிகிறதா 'அந்த அவர்' யார் என்பது? தெரிந்திருப்பீர்கள், என்றபோதிலும், விஷய விளக்கத்தை முன்னிட்டாவது அவர் யார் என்பதைச் சொல்லவேண்டுமல்லவா!

26—7—53-ல் டல்மாவரம் என்ற ஊரில் புதிதாகப் பிறந்த 'கன்றுக்குட்டி' ஒன்றுக்கு ஆசிகூறி அதனோடு விளையாட வந்த ஆச்சாரியார்தான், நாம் மேலே தந்துள்ள இரண்டு வாசகங்களையும் கூறியவர். இப்படிக் கூறியவுடனே, வெறும் ஆச்சாரியார் என்று மட்டும் கூறாமல் 'கன்றுக்குட்டிக்கு ஆசிகூறி அதனோடு விளையாட வந்த ஆச்சாரியார்' என்று ஏன் கூறவேண்டுமென்பதாக நீங்கள் கேட்பீர்கள். காங்கிரஸ் கமிட்டியைப் பசுவாக்கி, அதன் கிளைகளைக் கன்றுக்குட்டிகளாக்கி அவற்றோடு விளையாடும் 'பருவத்தில்' ஆச்சாரியார் இருப்பதாலேயே அவ்விதம் கூறினேன். காங்கிரசைப் பசுவென்று ஆச்சாரியார் ஏன் கூறினார் என்பது சரியாகப் புரியவில்லை என்றபோதிலும், தூத்துக்குடியிலும் கல்லக்குடியிலும் காங்கிரஸ் சர்க்காரால் நடத்தப்பட்ட கோரக் கொலைகள் நடந்திருக்கும் இந்தச் சமயத்தில், காங்கிரசுக்கு வேறு பெயரிட்டு அழைப்பது அவ்வளவு பொருத்தமாக இராதென்று கருதிய ஆச்சாரியார், அதனைப் பசுவென்றும், அதன் கிளைகளைக் கன்றுக் குட்டிகள் என்றும் அழைத்தார் போலும்! எப்படியென்றால்,

> "இந்த நாட்டில் பசுவைப் பற்றிச் சொன்னால்தான் மக்கள் நன்றாக உணர்ந்துகொள்ள முடியும்''

என்பதாக அவரே கூறியுள்ளார். எருதைவிடப் பசு மிகவும் சாந்தமானதென்று கூறப்படுவதை ஆதாரமாக வைத்து ஆச்சாரியார் இவ்விதம் பேசி மக்களை மயக்கப்பார்க்கிறார். காங்கிரசைப் பசுவாக்கிய ஆனந்தத்திலும் அவசரத்திலும் காங்கிரசின் கிளைகளை எல்லாம் கன்றுக்குட்டிகளாக்கிவிட்டார். கன்றுக் குட்டிகள் எல்லாமே பசுக்கள்தான் என்பது அவரது யூகம் போலும்! பசு, காளைக் கன்றுகளையும் ஈன்றெடுக்குமே, அதிலும் பெரும்பான்மை காளைக்கன்றுகளும் சிறுபான்மை பசுங்கன்றுகளுமே ஈன்றெடுக்கும் என்பதைக்கூட எண்ணிப்பார்க்க நேரமில்லாத நிலையில், தம்முடைய குட்டிக்கதைப் பட்டியலில் பசுக்கதையையும் சேர்க்கலாம் என்றெண்ணி அவ்விதம் பேசிவிட்டார், என்றே கருதுகிறேன். இல்லையேல், சாந்தமான பசுவுக்குக் காங்கிரஸ் கமிட்டியை ஒப்பிட்டுப் பேசி

மிக மிக மட்டமான சம்பவம்

யவர், முரட்டுச் சுபாவமுள்ள காளைகளைக் காங்கிரசின் கிளைகளுக்கு ஏன் ஒப்பிட்டுப் பேசவேண்டும்? காங்கிரஸ் ஸ்தாபனத்தைச் சாந்தத்தின் உறைவிடமாகப் பேசி மகிழ வந்த ஆச்சாரியார், அவரையும் அறியாமலேயே அதன் முரட்டுச் சுபாவத்தையும் கூறிவிட்டார். காங்கிரஸ் பசுவாம்! அதன் கிளைகள் கன்றுக்குட்டிகளாம்! அந்தக் கன்றுக்குட்டிகளில், காளைக் கன்றுகள் எத்தனை? பசுக்கன்றுகள் எத்தனை என்று கணக்கெடுத்தால், காளைகள் தான் அதிகமிருக்கும். காரணம், பசுக்களைவிடக் காளைகளே அதிகம் என்பதால் மட்டுமல்ல, காளைகளைப் போல் முரட்டுச் சுபாவமுள்ளவர்களே காங்கிரசில் பெருவாரியாக இருக்கிறார்கள் என்பதாலேயே அவ்விதம் கூறவேண்டியிருக்கிறது.

காங்கிரசில் இருப்பவர்களில் பெரும்பலோர் முரடர்கள் என்பதற்கு ஆச்சாரியாரே ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறார். அதிலும், மூக்கணாங்கயிறில்லாத காளை போல் மிகவும் முரட்டுத் தனமாக நடந்து கொள்ளும் சுபாவமுடையவர். அதனால்தான் துப்பாக்கியும், தடியும், கண்ணீர்ப்புகையும், அவரிடம் சர்வசாதாரணமாக விளையாடிக் கொண்டிருக்கின்றன,

அவரே கூறுகிறார்,

> "கன்றுக்குட்டிகள் துள்ளும், குதிக்கும், முட்டும். ஆனால் கன்றுக்குட்டி முட்டி ஒருவரும சாகமாட்டார்கள்"

என்பதாக! கன்றுக்குட்டிகள் துள்ளிக் குதித்து வந்து முட்டினால் எவரும் சாகமாட்டார்கள் என்று கூறுவது வாதத்துக்குக்கூட ஒப்புக்கொள்ள முடியாத ஒன்றாகும். முட்ட ஓடிவரும் கன்றுக்குட்டி எந்த இடத்தில் முட்டும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது. அதனுடைய முட்டுதல் படாத இடத்தில் பட்டுவிட்டால் யார்தான் சாகாமல் இருக்க முடியும்? அல்லது, கன்றுக்குட்டி இன்ன இடத்தில் தான் முட்டும், எனவே, அந்த முட்டுதலால் யாரும் செத்து விடமாட்டார்கள் என்று வரையறுக்கப்பட்டாவது இருக்கிறதா? அல்லது கன்றுக்குட்டியின் முட்டுதலுக்கு ஆளாகின்றவர்கள் பெரியவர்களேயன்றிச் சாதாரண முட்டுதலைக் கூடத் தாங்க முடியாத சிறுவர்கள் அல்ல என்றாவது கூற முடியுமா? சிறுவர்களைக் கன்றுக்குட்டி முட்டினால், அவர்கள் சாகாமல் அல்லது காயப்படாமல் பிழைத்து விடுவார்கள் என்றாவது கூறமுடியுமா? ஒன்றுக்கு, மேற்கோள் கூற முன்வரும் ஒருவர், தாம் கூறும் மேற்கோள் முன்னுக்கு பின் முரண்படாமல் பொருந்தி வரக்கூடியதாக இருக்கிறதா என்பதைக் கூட எண்ணிப்பாராமல் கூறுகிறார் என்றால், அவரால் மேற்கோள் காட்டிப் பேசப்படும் சம்பவம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை நான் கூறி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை அந்தச் சம்பவம் மிக மிக மட்டரகமானது — மக்கள் மத்தியில் கூறக்கூடாதது என்பது உங்களுக்கே தெரியும். எனவே தான்; காங்கிரசைப் பசுவுக்கு ஒப்பிட்டுப் பேசும் மேற்கோள், அதற்கு ஒரு சிறிதும் பொருந்தாதென்று கூற வேண்டியிருக்கிறது.

காங்கிரஸ் பசுவின் உறுப்புக்களில் ஒன்றாக விளங்கும் ஆச்சாரி சர்க்கார், சர்வ சாதாரணமாகக் கையாளும் முறைகளைப் பார்க்கும் எவரும், காங்கிரசைப் பசுவென்றோ, அதன் கிளைகளைக் கன்றுக்குட்டிகள் என்றோ கூற முன்வரமாட்டார்கள். காங்கிரசுக்கு உண்மையான மேற்கோள் கூற வேண்டுமானால், ஏதோ ஒரு காலத்தில் இந்நாட்டில் தர்மராஜ்யம் நடைபெற்றதாமே! அந்தக் காலத்தில் பசுவும் இன்னொரு மிருகமும் ஒன்றாக ஒரு துறையில் நின்று தண்ணீர் குடித்தனவாமே! பசுவுடன் ஒன்றாக நின்று தண்ணீர் குடித்த அந்த விலங்கை... வேண்டுமானால் காங்கிரசுக்கு ஒப்பிட்டுப் பேசினால் அதை எவரும் ஒப்புக்கொள்ள மறுக்க மாட்டார்கள். ஆனால், சாந்தத்திற்கு மேற்கோளாக எடுத்துக் காட்டப்படும் பசுவைக். கொடுமைக்கு உறைவிடமாக உள்ள காங்கிரசுக்கு மேற்கோளாக எடுத்துக் கூறினால் கூரிய மதியுடைய எவருமே ஒப்புக் கொள்ளமாட்டார்கள். மனித வேட்டையாடி இரத்தம் குடிக்கும் காங்கிரசாட்சிக்கு மேற்கோள் பசுவா? புலியா? பகுத்தறிவுள்ளவர்களே! பண்புமிக்கவர்களே! யோசித்துக் கூறுங்கள்.

ஆனால், உங்களுடைய யோசனைக்கு இடம் வைக்காமல் ஆச்சாரியாரே கூறிவிட்டார், காங்கிரஸ் ஒரு புலிதான் என்பதாக. எப்பொழுது இவ்விதம் கூறினார் என்று காங்கிரஸ் பக்தர்கள் மட்டுமென்ன, நீங்கள் கூடத்தான் கேட்பீர்கள்.

> "இந்த நாட்டில் பசுவைப் பற்றிக் கூறினால் தான் மக்கள் உணர்ந்து கொள்வார்கள்"

என்று கூறினாரே ஆச்சாரியார்! அதன் பொருள் என்ன? பேசப்படுவது புலியைப் பற்றித்தான் என்றபோதிலும், 'பசு' என்ற பெயரை அந்த இடத்தில் பயன்படுத்திப்பேசினால், மக்கள் வாயைப்பிளந்து கேட்டுக் கொண்டு சும்மா இருந்து விடுவார்கள் என்பது ஆச்சாரியாருக்கு நன்றாகத் தெரியும். எனவே தான் புலியைப் பசுத்தோலால் மூடுகிறார். பேசுவதில் சமர்த்தராச்சே ஆச்சாரியார்! வக்கீல் தொழில் புரிந்தவராயிற்றே! முன்னெச்சரிக்கையாக அந்த வாசகத்தை உருவகப்படுத்திப் பேசியிருக்கிறார். 'பசுவைப் பற்றிக் கூறினால்' என்று மொட்டையாக அந்த வாசகத்தைத் தொடங்கவில்லை, காரணம், "என்னய்யா! புலியைப் பசு என்று கூறுகிறீரே! உமக்குப் புத்தி கித்தி இருக்கிறதா?!! என்று எவராவது கேட்டு விட்டால் என்ன பதில் கூறுவது என்பது ஆச்சாரியாருக்கு முன் கூட்டியே தெரிந்தகாரணத்தாலேயே, அவர், அந்த வாசகத்துக்கு முன்னால்

> "இந்த நாட்டில்"

என்ற சொற்றொடரைச் சேர்த்துப் பேசியிருக்கிறார். இந்நாட்டில்தான் மிருகங்களில் ஒன்றான பசு, கடவுளாக வைத்துப் போற்றப்படுகிறது பசு மட்டுமென்ன! பசுவின் சிறுநீரே பாவந் தீர்க்கும் தீர்த்தமாகப் பயன்படுத்தப்படுகிறது. அது மட்டுமல்ல, பசுவின் சாணமே ஒரு கடவுளாக (பிள்ளையாராக)ப் போற்றப்படுகிறது. அது மட்டுமல்ல, பசுவின் உடம்பில் முப்பத்து முக்கோடி தேவர்களும் குடியிருப்பதாக வேதாகமங்கள் முழங்குவதை நம்பும் மக்கள் இந்நாட்டில்தான் இருக்கின்றனர். எனவே தான்

பசுவின் தோலைப் புலிக்குப் போர்த்துகிறார்

"இந்த நாட்டில்"

என்ற அடை மொழியை ஆச்சாரியார் அந்தவாசகத்தோடு சேர்த்துப் பேசினார். புலியின் கோர சொரூபத்தை மறைக்க என்ன முறையைக் கையாளலாமென்று கருதிய, தந்திரத்தால் மந்திரியாகிய ஆச்சாரியார், பசுவின் தோலை எடுத்து அதன் மீது போடுகிறார்—இது புலியல்ல, பசுவேதான்என்று பகிரங்கமாகவே பேசுகிறார். நாமும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

இந்தப், பசுத்தோல் போர்த்தப்பட்ட புலிக்கு விளக்கந்தர வந்த தந்திரசாலி மேலும் பேசுகிறார், துள்ளிக்குதித்து முட்டவரும் கன்றுக்குட்டியை,

"பெரிதானபின் மூக்கணாங் கயிறு போட்டு ஓட்டலாம்"

என்பதாக. ஆனால், இவ்விதம் கூறுகின்ற ஆச்சாரியாரே பெரிதான கன்றுக்குட்டியை அல்ல,பெரிதான பின் அது எப்படிக் கன்றுக்குட்டி என்று அழைக்கப்படும்? படாது, எனவே காளையை, அதாவது, சென்னையில் நடைபெறும் காங்கிரஸ் சர்க்காரை மூக்கணாங் கயிறு இல்லாமலே ஓட்டுகிறார். சென்னைக் காங்கிரஸ் சர்க்கார் என்ற மூக்கணாங் கயிறற்ற காளை, கட்டுக்கடங்காமல், கண்டவர்களை எல்லாம் சுட்டுக் கொன்றபடி இருக்கிறதே! ஏன் இந்தக் காளைக்கு மூக்கணாங்கயிறு போட்டு ஓட்டவில்லை? காளை, வண்டியில் கட்டி ஓட்டும் பருவம், அல்லது கலப்பையில் பூட்டி உழும் பருவம் அடையும் சமயத்தில் அதற்கு அவசியம் மூக்கணாங் கயிறு போட்டுத்தானே ஓட்டவேண்டும். அது போலவே நாட்டை ஆளும் பக்குவத்தை அடைந்துவிட்டதாகச் சொல்லப்படும் (நாட்டை ஆளும் பக்குவத்தை இன்னும் பெறவில்லை) காங்கிரஸ் பசுவின் கன்றுக்குட்டிகளில் ஒன்றான சென்னைக் காங்கிரசும், அமைதி, ஒழுங்கு, நாணயம் ஆகிய நற்பண்புகளுக்கு இலக்காக நடப்பதன் அறிகுறியாகத் தன் சிறுபிள்ளைத்தனத்தை மாற்றிக், கட்டுப்பாடு என்ற மூக்கணாங் கயிற்றைப் போட்டுக்கொண்டுதானே, ஜனநாயக ஆட்சி என்ற வண்டியை, மேடு பள்ளங்களில் ஏறி விழாமல் பக்குவமாகப் பார்த்து ஓட்டவேண்டும். அங்ஙனமன்றித் 'தின்று கொழுத்துத் தெருவழியே திரியும் மூக்கணாங் கயிறற்ற கோயில்மாடு போல், சென்னைமாகாணத்திலுள்ள பெரிய காங்கிரஸ் மாடும் (சர்க்கார்) கேட்பாரில்லை என்ற போக்கில் நாட்டு மக்களை வதைக்கலாமா?

"எங்களுக்குக் கண்ணீர் புகையே ஒழுங்கு! தடியடியே அமைதி! துப்பாக்கிப் பிரயோகமே நாணயம்!" என்றமுறையில்நடப்பதும், பின்னர் நாம்எல்லோரும் பசுவின் கன்றுகள்! நீங்கள் புலியின் குட்டிகள் என்று பசப்புவதும் எவ்வளவு காலத்துக்குத்தான் செல்லுபடியாகுமென்று இந்தக் கன்றுக்குட்டிகள் நினைக்கின்றனவோ, யாருக்குத் தெரியும்!

ஆச்சாரியார், காங்கிரசைப் பசுவாக்கி அதன், கிளைகளைக் கன்றுக் குட்டிகளாக்கிப் பேசிய போதும், சில சமயங்களில் இந்தக் கன்றுக் குட்டிகள் துள்ளிக் குதித்துக் கும்மாளம் போட்டு முட்டும் என்று கூறியபோதும் பல்லாவரம் மாநாட்டில் குழுமியிருந்த காங்கிரஸ் பசுவின் உறுப்புகள் எல்லாம் சிரித்தனவாம், அதாவது காங்கிரஸ்காரர்கள் எல்லோரும் சிரித்தார்களாம். இது 'சுதேசமித்திரன்', 'தினமணி' முதலான காங்கிரஸ் பத்திரிகைகளில் எல்லாம் (சிரிப்பு) இவ்விதம் வெளியிடப்பட்டுள்ளது.

இவர்கள் எல்லோரும் ஏன் சிரித்தார்கள்? எண்ணிப்பார்க்க வேண்டிய விஷயம் தான். கன்றுக்குட்டி முட்டுமென்றால், அதற்கொரு சிரிப்பா? இது சிரிக்கக்கூடிய விஷயமல்லவே! கன்றுக்குட்டி என்றால், அது, சாதாரணமாகவே துள்ளும், குதிக்கும், முட்டவரும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தானே! எனவே இதற்காகச் சிரித்திருக்கமாட்டார்கள். பின், ஏன் சிரித்தார்கள்? கொடுமையே ஒரு வடிவெடுத்து உலவுவது போலுள்ள இன்றைய காங்கிரசாட்சியைப் பார்த்து, "இது ஒரு பசு!" அதன் கிளைகளைப்பார்த்து, இவை "எல்லாம் கன்றுக்குட்டிகள்!" என்று கூறுகிறாரே காங்கிரஸ் உறுப்பினர்களில் ஒருவரான ஆச்சாரியார்! என்றெண்ணியதும், அங்கு குழுமியிருந்தவர்களுக்குச் சிரிப்பு ஏற்பட்டிருக்கும். அதிலும், நாலைந்து நாட்களுக்கு முன்னர் தான், தூத்துக்குடியில் நாலு பேரையும், கல்லக்குடியில் ஏழு பேரையும் கொன்று குவிக்கும் கொடுமையாம் 'அகிம்சை'யைச் செய்துவிட்டு வந்த ஆனந்தத்தில் ஆழ்ந்திருக்கும் ஆச்சாரியார், டில்லி சர்க்காரைப் பசுவாகவும், சென்னை போன்ற கிளைச் சர்க்கார்களைக் கன்றுக்குட்டிகளாகவும் வர்ணித்துப் பேசுகிறாரே என்றெண்ணியதும், அங்கிருந்த அனைவரும் ஆச்சரியத்தால் ஆரவாரித்துச் சிரித்திருப்பர். இதைத் தவிர அந்தச் சிரிப்புக்கு வேறு பொருள் இருக்கமுடியாது. இல்லை, அந்தச் சிரிப்புக்கு வேறுபொருள் இருக்கிறதாகக் கூறுவதானால், அது காங்கிரசைப் பசுவாக்கிக் கூறப்படும் ஒரு கற்பனையைப் போலவே கருதப்படும் என்பது உறுதி.

நான் கூறும் இந்த விளக்கத்தை உறுதிப்படுத்தும் முறையிலேயே ஆச்சாரியாரின் பேச்சும் அமைந்திருப்பதைக் காணலாம். அதாவது, புதியவற்றில் மோகம் என்பதைப் பற்றிப் பேசவந்த ஆச்சாரியார்,

"தேசிய விவகாரங்களில், புதிதாக, கடைசியாக எது நடக்கிறதோ, அதுதான் மக்கள் மனதைக் கவருகிறது"

என்று குறிப்பிட்டுள்ளார். தேசிய விவகாரங்களில், கடைசியாக மக்கள் மனதை நல்லமுறையிலோ, கெட்ட முறையிலோ — கவரும் முறையில் நடைபெற்ற சம்பவம் என்ன? குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்குக் கடைசிவரையிலும், பொதுவாகவே எல்லோருக்கும் சிறிது காலம் வரையிலுமாவது, அவர்களுடைய உள்ளத்தை விட்டகலாத— அகற்ற முடியாத சம்பவங்களில் கடைசியாக நடைபெற்றிருப்பது என்ன? பல்லாவரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டுக்கு முன்னர், கடைசியாக நடைபெற்ற 'தேசிய' சம்பவம் என்ன? மக்கள் மனதை எந்தச் சம்பவம் கவர்ந்திருந்தது. தூத்துக்குடியிலும், கல்லக்குடியிலும் நடைபெற்ற 'தேசிய

(13-ம் பக்கம் பார்க்க)

ஒரு சொல்!

மூளை, சிதறிக் கிடந்தார்.

கழுத்தைத் துளைத்துச் சென்றது, குண்டு.

கைவிரல் ஒன்றுபோயிற்று!

துடையில்—பலமான காயம்.

வீட்டில் பேசிக்கொண்டிருந்தோம்—குண்டடி பட்டு, என் மாமா, சுருண்டு வீழ்ந்தார்.

கலியாணம் செய்யப் பெண் பார்த்திருந்தோம். எங்களைக் கதறவிட்டுப் போய்விட்டான். ரயிலில் வரும்போது, தூங்கிக்கொண்டிருந்தானும். மீளாத தூக்கத்தில் புதைத்துவிட்டது, இந்தச் சர்க்காரின் துப்பாக்கி.

நான் வெற்றிலை விற்பவன்—போய்க்கொண்டே யிருந்தேன் — துப்பாக்கி துளைத்தது, என்னை!

அப்பப்பா! சுடுவதென்றால், காலிற்குக்கீழ்தான் சுடுவார்களாம்—ஆனால், இந்த சர்க்கார், கழுத்திலும், முதுகிலும், கையிலும், நெஞ்சிலும், வயிற்றிலும் சுட்டிருக்கிறது!!

பிணமாக்கினர்—அந்தப் பிணங்களைப் புதைக்கவும், எங்களை விடவில்லை.

*

இறந்துபோன மகனை நினைத்துக் கதறும் மாதா! செத்து வீழ்ந்த கணவனையெண்ணிக் கண்ணீர் வடிக்கும் மனைவி! 'அப்பா! அப்பா!! யாரப்பா, எனக்கு இனி?', என்று மழலைமொழியில், விழியின் நீரைக் கலந்து பேசும், குழந்தைகள்! — தமிழகம், தவிக்கிறது — தன்னுடைய மடியில் தவழ்ந்து விளையாடிய 11 உயிர்களை (ஆச்சாரியார் பேர், செத்ததாகத் தெரிவிக்கிறார்—அப்படியே வைத்துக் கொள்வோம்)—பறிகொடுத்து விட்டது. ஆறு உயிர்களாம்! — 'அகிம்சாமூர்த்தி' தெரிவிக்கிறார். ஒரு உயிராகவே இருக்கட்டும்—அது போய்விட்டால், அந்த இல்லத்தில் எழும் கூக்குரல் எத்தகையதாயிருக்கும். ஆறு உயிர்கள், போனதென்றால்! அதுவும், எதிர்பாராதவகையில் இறந்தனரென்றால், எவ்வளவு கொடுமை, அது! ரயிலில் தூங்கிக்கொண்டிருந்தோர் பலி! வீட்டில் உட்கார்ந்திருந்தோர், செத்து வீழ்ந்தனர்! வீதியிலே சென்றோர், பிணம்! மணமகனாக இருந்தவர் பிணம்! நூலேந்தி தறி நோக்கிச் சென்றவர், பிணம்!—இவ்வண்ணம் பிணமலை, கொஞ்சநேரத்தில், குவிக்கப்பட்டிருக்கிறது — ஜுலை 15—ந் தேதி. கும்பிகொதிக்கும் மாதாவின் கண்ணீர் உலரவில்லை! மஞ்சள் கயிறு இழந்து, 'விதவை' யாகிப்போன கன்னியரின் வாழ்வை இனி, தந்துவிட முடியாது!—உள்ளத்தை, உலுக்க வேண்டிய விஷயம். எண்ணமெல்லாம், கண்ணீராக்கக்கூடிய, கொடுஞ் சம்பவம். கல்மனது படைத்தவனும், கலங்குவான். உலகத்தில் வாழப்பிறந்தோர், அவர்களை வாழவைக்க வேண்டிய 'சர்க்காரால்' சாகடிக்கப் படுவதை வெறியனும் ஏற்கான். வரி செலுத்தி, சர்க்காரை நடத்துவோருக்கு 'சம்பளம்' தரும் எஜமானன் — இந்நாட்டுக் குடிமகன் — எதுவுமற்ற அனாதையாகச் சுடுகாட்டில், சுட்டெரிக்கப் படுவது—சொல்லவே, கூசும், சம்பவம்!—ஆறு உயிர் (அவர் கணக்குப்படி)! 70 பேருக்கு, குண்டுக்காயம்!! இத்தனையும், ஒரே நாளில்.

இது மட்டுமா? அந்த ஒரே நாளில், ஆட்சிபுரியும் அரசாங்கம், தன்னுடைய 'கவுரவத்தை'க் காப்பாற்றிக் கொள்வதற்காக, சிறைக்குள் இழுத்துப் பூட்டிவைத்திருக்கும் பட்டியலைப் பாரீர்!

சென்னை	220
தூத்துக்குடி	30
ஆவடி	7
சித்தூர்	20
தாம்பரம்	29
கோதம்பேட்	108
கேப்பர்குவாரி	2
உடுமலை	82
சேலம்	113
இச்சிபுத்தூர்	19
சிதம்பரம்	50
மேட்டுப்பாளையம்	12
காட்பாடி	60
தஞ்சை	90
திருவள்ளூர்	21
காஞ்சீபுரம்—அரக்கோணம்	156
வண்டலூர்	5
மதுராந்தகம்	9
அச்சரபாக்கம்	7
மாயவரம்	100
வேலூர்	60
திருமால்பூர்	14
செங்கோட்டை	24
பேராவூரணி	20
மதுரை	258
கோவை	90
ராசபாளையம்	10
சண்ணேரி	3
திருவெண்ணெய்நல்லூர்	4
ஒத்திவாக்கம்	20
ஆரணி ரோடு	3
கண்ணமங்கலம்	1
குடியாத்தம்	7
புதுக்கோட்டை	1
சோமங்கலம்	4
பழனி	12
பூதலூர்	9
மன்னார்குடி	30
கோரடாச்சேரி	13
ராசப்பையன்சாவடி	6
நெல்லை	14
ஆம்பூர்	16
அக்கரைப்பேட்டை	7
திண்டுக்கல்	31
கூனூர்	18
திருமங்கலம்	20
புதியம்புத்தூர்	14
ஆத்தூர்	4
ஈரோடு	56
கோயில்பட்டி	29
விருதுநகர்	87
ஆழ்வார்திருநகரி	53
அம்மயநாயக்கனூர்	19
திருத்தங்கல்	10
தேவக்கோட்டை	5
சித்தையன்கோட்டை	23
திருத்துறைப்பூண்டி	27
காரைக்குடி	4
திருப்புத்தூர்	2
குன்னூர்	14
திண்டிவனம்	32
நாகப்பட்டினம்	15
பரமக்குடி	3

கோல்லேக்கோம்பை	3
சிவகங்கை	4
பொட்டனேரி	5
அயோத்யாபட்டணம்	5
குளித்தலை	21
கீரனூர்	7
நங்கவள்ளி	33
கொள்ளிடம்	10
அபிராமம்	3
சிதம்பரம்	67
திருப்பத்தூர்	60
சேர்மாதேவி	6
கும்பகோணம்	7
மானுமதுரை	9
சிலைமான்	40
பட்டமங்கலம்	18
நாச்சியார்கோவில்	3
சங்கரநயினார்கோவில்	2
பள்ளப்பட்டி	3
குளித்தலை	30
நெல்லை	33
பாலக்காடு	9
அறந்தாங்கி	2
நடுப்பட்டி	15
இடப்பாடி	37
சூலூர்	6
கொண்டாம்பட்டி	8
கீழ்விசாரம்	5
தென்திருப்பேரை	6
விக்ரமசிங்கபுரம்	4
தனுஷ்கோடி	5
திருவிடமருதூர்	8
கணியூர்	13
எண்டிப்புத்தூர்	10
சோழவந்தான்	20
கொண்டயம்பட்டி	9
மங்கநல்லூர்	13
பேரம்பூர்	3
தங்கவயல்	29
கந்தநேரி	8
கொமரலிங்கம்	5
மோகனூர்	7
உளுந்தூர்ப்பேட்டை	6
கிலக்கோட்டை	10
பாகனேரி	6
சங்கரப்பள்ளி	7
தென்காசி	10
மத்தூர்	6
தாசம்பட்டி	3
கண்டமங்கலம்	3
வெட்டுக்காடு	1
கடையநல்லூர்	17
சிந்தாமணி	3
விழுப்புரம்	5
வாலாஜாபாத்	15
நெல்லிக்குப்பம்	8
டால்மியாபுரம்	49
கோட்டையூர்	40
வீரபாண்டி	13
தேவதானபட்டி	17
ஒப்பட்டி மார்க்கயன்கோட்டை	100
கண்டமனூர்	17
உத்தமபாளையம்	43
	3202

அந்த ஒரே நாளில், நாடெங்கும் நடைபெற்ற அறப்போரின் விளைவாகச் சிறையிலே பூட்டப்பட்ட வீரர்களின், பட்டியல் — நமக்குக், கிடைத்தது, இது. நம் கைக்கு எட்டாமலிருக்கும் செய்திகள் எவ்வளவோ! செய்திகளை அனுப்பி, புள்ளி விபரம் தரவேண்டிய பொறுப்பாளர்களுமன்றோ, ஆச்சாரியார் 'அன்பு'க்குப்பாத்திரமாகி விட்டனர்!!

இழந்த உயிர்கள்—சிறையில் சித்ரவதைப்படும் 'பட்டியல்'—எவ்வளவு வேதனையான, காட்சி! சிந்தை நோகவேண்டிய, சம்பவம்! —இத்தனை பெரிய தியாகத் தழும்பை, இதுபோது, நாம் எதிர்பார்க்கவில்லை. இரத்த வெறிகொண்டலையும் சர்க்கார் இது — என்று எண்ணவுமில்லை. நம்முடைய கோரிக்கையைத் தெரிவிப்போம்—கண்டனக் குமுறலின் அளவையும் அதில் ஈடுபடும் வீரர்களின் கூட்டத்தையும் கண்டு, விவேகம் பிறக்கலாம் இந்த சர்க்காருக்கு—அறப்போர் வீரர்கள் அன்றைய தினம் எழுப்பும் முழக்கம், இந்த அதிகாரக் குருடர்களின் காதுகளில் ஓங்கி ஒலிக்கட்டும் — எனவே, நினைத்தோம்.

அமைதியான முறையில் அறப்போர்—என்றோம்.

அமைதியா?—என்று, சீறிக் கொட்டியது, சர்க்கார்.

கண்ணியமான முறையில் கண்டனம்—என்றோம்.

கண்ணீரை ஓடவிடுகிறோம்—என்று, பதில்தந்தது, இச்சர்க்கார்.

உயிரோடு சென்றோம்—பிணங்களைப் பெற்றோம்.

சிங்கநடைபோட்டுச் சென்றனர், வீரர்கள் — திரும்பும்போது, நொண்டியாயினர்.

எதிர்பாராதது—ஆனால், 'இதை எல்லாம் எம்மிடம் எப்படி எதிர்பார்க்காமலிருக்கிறீர்? யார் தெரியுமா, நாங்கள் — சத்யாக்கிரகம் நடத்தியோரல்ல; சர்க்காரை நடத்துபவர்கள்!' என்று தெரிவிக்கிறார் ஆச்சாரியார்.

மக்களின் குரலை, மக்களின் வரியால் வாழ்வோர், கவனிப்பர் என எண்ணினோம்.

மக்கள் செலுத்தும் வரியைக் கொண்டு செய்யப்பட்ட குண்டுகளைக்கொண்டு, கொத்திச்சென்றது, உயிர்களை.

இந்தக் கொடுமையைக் கேட்டால், சராசரி மனிதனுக்கும் உள்ளம் குமுறும், கட்சிக் கோட்டைத் தாண்டிக் கண்டிக்கத் தவறான்—'நடப்பது அரசாங்கமா! அல்லது அட்டூழியமா!!' என்று அதட்டிக் கேட்கும், மக்கள் மன்றத்தில் உலவும் பத்திரிகைகள்.

மக்கள்மீது தடியடிப் பிரயோகமா?—செய்தது, யார்! நம்ம சர்க்காரா? அப்படியானால், அது தடியடிப் பிரயோகமல்ல, தாங்கமுடியாத அன்பின் விளைவு.

துப்பாக்கியாலா சுட்டனர்! யார்? —நம்ம சர்க்காரா! அப்படியானால், பொதஜனங்களே, குண்டுகளல்ல அவை; மலர்ச் செண்டுகள்!!

இவ்விதம், எந்த ஏடும் எழுதாது —கண்டிக்கும்—காரணம் கேட்கும் —வெறிச் செயலுக்கு வேதாந்தத் திரைகள் மூட முயலாது.

இந்த நற்பண்பை, வங்கத்தில் உலவும் ஏடுகள், அண்மையில் காட்டிக்கொண்டிருக்கின்றன.

கல்கத்தாவில், காங்கிரஸ் சர்க்கார் டிராம்வே கட்டணத்தை உயர்த்தினார்கள். எவ்வளவு தெரியுமா? ஒரு தம்பிடி அதிகமாக்கினார்கள்! அதனை, மக்கள் எதிர்த்தனர். மக்கள் எதிர்த்தால், பொறுக்குமா, 'சுயராஜ்யம் கொண்டுவந்த அரசாங்கம்?' சுட்டது! தடியடி தந்தது!

அதைக் கண்ட ஏடுகள் யாவும் கண்டித்தன.

அதனைக் கண்ட சர்க்கார், அந்த

ஏடுகளின் நிருபர்கள் மீது, போலீசை ஏவியது.

நிருபர்கள், தாக்கப்பட்டார்கள்—இந்த நீசத்தனமான வெறியைக் கண்டிக்க, ஒருநாள் எல்லா ஏடுகளும் நிறுத்தப்படப்போகின்றன—தமது கண்டனத்தைத் தெரிவிக்கும் அறிகுறியாக.

இது, அங்கே! வங்கத்தில்!!

ஆனால், இங்கோ?—சர்க்கார் வீசிடும் வேதனைகளைக் காணும் 'நம்ம' ஏடுகள், வெண்சாமரம் வீசுகின்றன.

'சுட்டுப் பொசுக்கியது, சர்க்கார்'

'அட்டகாசம் அடக்கப்பட்டது'

'ஒருநாள் கூத்து'

இதுபோல. தீட்டி மகிழ்கின்றன. இறந்துபோன உயிர்களுக்கும், குண்டடிபட்டு கிடக்கும் மக்களுக்கும், ஒரு சொல்தர ஒப்பவில்லை, இந்த ஏடுகளின், மனம். ஆனந்தக்கூத்தாடுகின்றன—அகமகிழ்ச்சி அடைகின்றன.

வங்க மக்கள் தாக்கப்பட்டதும், வங்க ஏடுகள் போங்கி எழுந்தன.

இங்கோ, போங்கியெழாததுமட்டுமல்ல, பூரிப்பு முரசம் கொட்டுகின்றன!

காரணம் என்ன? வங்க மக்கள் நடத்தும் ஏடுகள் அவை!

இவையோ, துப்பாக்கித் துளைக்க, தடியடி தாக்க, அவதிப்படும் 'மக்கள்' நடத்தும் ஏடுகளல்ல!

சொந்த மகன், சுட்டு வீழ்த்தப்படுவது கேட்டதும், பொங்கியெழுந்தன வங்க ஏடுகள்.

சென்னை ஏடுகளோ, துப்பாக்கிப் பிரயோகத்துக்கு தத்துவார்த்தம் செய்யும் சாதுர்ய வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றன.

வேதனை கலந்த விசித்திரம் — இதோடு முடிந்துவிடவில்லை. 'தாங்கள், யாருக்காக இருக்கிறோம்' என்பதையும், காட்டிக்கொண்டிருக்கின்றன. அகில 'தேசியம் பேசும்' 'இந்து' அதட்டிக்கேட்கிறது, சட்டசபை எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் கம்யூனிஸ்டுத் தலைவர் தோழர் பி. ராமமூர்த்தியை,

"துப்பாக்கிப் பிரயோகம் பற்றி சொல்மாரி, பொழிந்தாயே? ஏன், புதுக்கிராமம்பற்றிப் பேசவில்லை! பார்ப்பனர்கள் தாக்குண்டது பற்றி, ஒரு அனுதாபச் சொல்லைக்கூட உமது பிரசங்கத்தில் காண முடியவில்லையே!"—என்று.

ஒரு அனுதாபச்சொல்! கேட்கிறது. எதற்கு, புதுக்கிராமத்தில், யாரோ, காலிகள் செய்த அக்கிரமத்துக்கு.

அன்பர் ராமமூர்த்தியிடமிருந்து 'அக்கிரகாரம்' குறித்து, சட்டசபையில், அனுதாபப் பிரேரணையை, எதிர்பார்க்கிறது, 'இந்து'. ஆனால், ஆறு உயிர்கள் பறிபோனது கண்டு, ஆறுதலோ—தேறுதலோ, சொல்ல வரவில்லை.

ஆறு உயிர்கள் (ஆச்சாரியார் கணக்குப்படி) குமுறவில்லை, நெஞ்சம், புன்னகை அரும்புகிறது!

புதுக்கிராமம் — கொந்தளித்து, எழும்புகிறது, கோபாவேசமாகக் கர்ஜிக்கிறது.

இது, 'இந்து' இதழ்! இங்கேயுள்ள ஏடு!!

ஆயிரக்கணக்கானோர், சிறையில் கிடப்பது கண்டும், 'அவர்கள் ஏன் கிடக்கிறார்கள்?' என்றோர் கேள்வி பெழுப்ப, மனம்வரவில்லை, 'இந்து'வுக்கு.

ஆனால், சில வீடுகளில் புகுந்து, யாரோசிலர், அட்டகாசம் செய்தது காண, ஆர்ப்பரித்து எழும்புகிறது.

ஆர்ப்பரிக்கட்டும்—அதனை நாம் குறைகூறவில்லை.

அக்கிரகாரம் தாக்குண்டதும், ஆர்ப்பரிக்கும் போக்கு, ஆறு உயிர்கள் பலியானது கண்டு, வாளாயிருப்பதேன்?

இந்தச் சுபாவத்தை என்னவென்றுரைப்பது! 'ஒரு அனுதாபச்சொல் ஏன் உரைக்கவில்லை?' என்று கூறி, 'தம்மவரின்' திக்கற்றியான நிலையை அகில உலகுக்கும் எடுத்துச் சொல்லுவதுபோல சீலிக் கண்ணீர் கொட்டுகிறது!

ஜூலை 15 — 'புதுக் கிராமம்' உண்டுபண்ணுவதற்காக ஏற்பட்ட போராட்டமல்ல.

புனிதமான கொள்கையினை, பொல்லாங்கு வீசிடும் டில்லி பீடத்துக்கு எடுத்துக் காட்டிடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட நாள்.

அறப்போர் வீரர்கள் கையில் கட்டாரி ஏந்தி, களம் நோக்கிச் செல்லவில்லை.

எனினும், துப்பாக்கி வைத்திருக்கும் துரைத்தனம், சுட்டு வீசிற்று, மக்களை.

அறப்போர் வீரர்கள், 'திராவிட நாடு திராவிடருக்கே!' என்று முழக்கமிட்டுச் சென்றனர்.

உங்கள் முழக்கத்துக்கு இதோ பரிசு என்று மண்டைகளை உடைத்து, கைகால்களை ஒடித்து கர்ஜித்தது, அரசாங்கம்.

இவ்வளவு வேதனைகளை வீசிய ஆட்சியின் போக்கு குறித்து, சிறு சொல் சிந்தவில்லை, 'இந்து'வும் ஏனையவும்!

ஆனால், 'புதுக் கிராமம்' குறித்து போர்ப்பரணி பாடுகிறது — ஒரு அனுதாபச் சொல், ஏன் தரவில்லை என்று கேட்கிறது.

ஆயிரக்கணக்கானோர், சிறையில் வாடுவது—'இந்து' ஆசிரியரின் உள்ளத்தைத் தொடவில்லை. ஏனெனில், அவர்கள், 'பிரம்மகுலமல்ல!'

ஆனால், ஏதோ ஒரு கிராமத்தில் யாரோ சில விஷமிகள் செய்த வேதனைகளை, விவரித்து விவரித்து எழுதுகிறது.

மலையைக் கடுகாக மதிக்கிறது! கடுகை மலையாகக் காட்டுகிறது!!

இந்த பூமியிலுள்ள எல்லோரும், மனிதர்களாக வாழவேண்டும், என்கிற நற்கொள்கைக்காகப் போராடும் வீரர்காள்! — எவ்வளவு விசித்திரமான 'மக்களிடை'யில் நாம் உலவுகிறோம், என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

புலியும் நரியும், காட்டில்மட்டுமல்ல—நாட்டிலும் உலவுகின்றன!

அவைகளுக்கிடையில் தான் நம் மரும் இன்பச் சோலையை, அமைக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

மிகப் பெரும் பொறுப்பு! ஆனால் மிக மிக இன்பம் தரச்செய்வது!!—இதனை மீண்டும் ஒரு முறை எண்ணிக்கொள்வோம்.

நம் இதயங்களில் சுடர்விட்டெரியும், லட்சியஜோதி கொழுந்துவிடச் செய்வோம்!!

★

திராவிடநாடு

காஞ்சி] 2—8—53 [ஞாயிறு

நிபுணர் கமிட்டிக்கு......

★

புதிய கல்வித் திட்டம் பற்றிய சட்டசபை விவாதம் ஒருவாறு முடிந்து விட்டது. சட்டசபையில் உள்ள பெரும்பான்மையினர் இத்திட்டத்தை முழுமனதுடன் எதிர்க்கின்றனர் என்பது நன்கு தெளிவுபடுத்தப்பட்டு விட்டது. ஆச்சாரியாரின் அசைக்க முடியாத பிடிவாதத்தோடு கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டத்தை, சிறுவர் கல்வியில் சிரத்தையும், வர்ணசிரமக் கொள்கையில் வெறுப்பும், அறிவில் தெளிவுமுள்ள சட்டசபை உறுப்பினர்கள் அனைவருமே எதிர்த்திருக்கின்றனர் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. "என்னுடைய வாழ்நாளில் ஏற்பட்டபிரச்னைகளில் ஏதாவது முக்கியமானது இருக்குமானால், அது, இதுதான்" என்று ஆச்சாரியாரால் கூறப்பட்டுக் கொண்டு வரப்பட்ட அந்த 'முக்கியமான'—'முதல்தரமான' திட்டத்தை, நாட்டு நலனில் நாட்டங்கொண்டு பணிபுரியும் சட்டசபை உறுப்பினர்கள் முறியடித்து விட்டனர் என்பது 'சந்திரமதியின் தாலி' போலன்றி வெளிப்படையாகவே அறிவுடைய எல்லோருக்கும் தெரிகிறது. சட்டசபை நடவடிக்கைகளை நடுநின்று கவனித்து நல்ல தீர்ப்புக் கூறும் நிலையில் இருக்கும் சபாநாயகரே, சர்க்காரின் பேரால், ஆச்சாரியார் தம்முடைய சொந்தத்தில் கொண்டு வந்த இந்தத் திட்டத்தை ஆதரித்துத் தீர வேண்டுமென்ற நிர்ப்பந்தத்துக்கு ஆளாகி, ஆச்சாரியாரை (சர்க்காரை அல்ல) ஆதரித்துத் தம்முடைய ஓட்டை அளித்துள்ளார் என்றால், அந்தத் திட்டத்தைச் சட்டசபை எந்த அளவுக்கு எதிர்த்திருக்கிறதென்பதும் புலனாகிறது.

சபாநாயகர், தாம் செய்த காரியம், ஏதோ புத்திசாலித்தனமானது—புனிதமானது —எல்லோராலும் பாராட்டி வரவேற்கக்கூடியது என்று நினைத்துக்கொண்டு, இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டரி முறைப்படி தாம் ஓட்செய்துவிட்டதாகப் பெருமைப்பட்டுக்கொள்கிறார்.

இங்கிலாந்திலோ அல்லது வேறெந்த நாட்டிலோ, அதாவது, 'பார்லிமெண்டு' என்ற ஒன்றை ஜனநாயக முறைப்படி வைத்து ஆட்சிபுரியும் எந்த நாட்டிலும், அந்த ஆட்சிக்குத் தலைவனாக இருப்பவன், தன்னுடைய சொந்த அபிப்ராயத்தை அடிப்படையாகக் கொண்டு எந்தத் திட்டத்தையும் அமுலாக்க முன்வரமாட்டான். ஏதாவது ஒரு திட்டத்தைக் கொண்டு வருமுன், அத்திட்டம் நாட்டுக்குத் தேவையா? மக்களுக்கு நன்மை தரக்கூடியதா? என்று தன்னுடைய அரசியல் சகாக்களுடன் கலந்தாலோசித்த பின்னரே, அத்திட்டத்தை அமுலாக்கும் முயற்சியில் ஈடுபடுவான். அதிலும், மக்களும், மக்களின் பிரதிநிதிகளும் தங்களுக்குத் தேவையான திட்டங்கள் இவை இவை என்று கூறவும், கூறியவற்றை அமுலாக்கவுமே ஆட்சித் தலைவன் முயல்வான். அங்ஙனமன்றி, ஆட்சித் தலைவனுடைய மூளையில் ஏதாவதொரு புதிய திட்டம் உதயமானால், அத்திட்டத்தை நாடே ஏற்றுக்கொண்டு பரிபூரண ஆதரவு தந்து விட்டதென்ற நினைப்பில் அதனை அமுலாக்க முயல்வதும், அதற்குச் சட்டசபையின் சபாநாயகர், தம்முடைய நடுநிலைமைத் தன்மையை மறந்து ஓட் அளிக்க முன்வருவதும் எந்தப் பார்லிமெண்டரி முறைக்கும் ஒத்துவராத ஒரு 'புதுமாதிரிமுறை' என்பது 'நமது' சபாநாயகருக்குத் தெரியாவிட்டால், தெரிந்துகொள்ள வேண்டுமென்று பெரிதும் விரும்பிக் கேட்டுக்கொள்கிறோம்.

எனவே, ஆச்சாரியார்தம்முடைய சொந்தப் பொறுப்பில் கொண்டு வந்த கல்வித்திட்டத்தை ஆதரித்து ஓட் அளித்தது மிக மிக தவறென்பதுமட்டுமல்ல, ஜனநாயகக் கோட்பாட்டுக்கே முற்றிலும் மாறான ஒரு சம்பவமுமாகும் என்பதைக் குறிப்பிடாமல் இருக்கமுடியவில்லை.

சபாநாயகர், தம்முடைய நடுநிலைமைத் தன்மையை மறந்து ஓட் அளித்தும் அத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர முடியாமல் தடுத்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதைக் காணப் பெரிதும் மகிழ்கிறோம்—தீர்மானத்தை நிறைவேற்றிய எம். எல். ஏ. நண்பர்களை எல்லாம் பாராட்டுகிறோம். குறிப்பாக இத்தீர்மானத்தை நிறைவேற்றுவதில் ஒத்துழைத்த காங்கிரஸ் எம். எல். ஏ., நண்பர்களை வாழ்த்துகிறோம்.

இனி, நடைமுறைக்குக் கொண்டு வரவிடாதபடி பெரும்பான்மை சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவோடு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இப் புது ஆரம்பக் கல்வித் திட்டத்தைப் பரிசீலனை செய்யும் பொறுப்பை ஒரு 'நிபுணர் கமிட்டி'க்குவிடப்போகிறார்களாம். அந்த நிபுணர் கமிட்டியில் உத்தியோகஸ்தர்களும் உத்தியோகப் பற்றற்றவர்களும் இருப்பாராம். அதாவது கல்வித்துறையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், அதிகாரிகளல்லாதாரும் இருப்பாராம். இது காண, மகிழ்கிறோம்—வரவேற்கிறோம். ஆனால் இந்த நிபுணர் கமிட்டிக்கு யாரார் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்—அவர்களைத் தேர்ந்தெடுப்பவர் யார்? தனிப்பட்ட ஒருவரா? அல்லது, ஆளும் கட்சியில் சிலரும், எதிர்க்கட்சியில் சிலரும் சேர்ந்து அந்த நிபுணர் கமிட்டியைத் தேர்ந்தெடுப்பார்களா என்பது இனிமேல்தான் தெரியும்.

தேர்ந்தெடுக்கப்படும் நிபுணர் கமிட்டி, எப்படி — யாரால் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அது, தன்னுடைய கடமையை நடுநின்று செய்வதைப் பொறுத்தே அதன் வெற்றியும் தோல்வியும் இருக்கிறது, என்ற போதிலும், சட்டசபை, இக்கல்வித் திட்டத்தைப் பொறுத்து நடந்து கொண்ட முறையைக் கவனித்துப் பார்க்கும் போது, தேர்ந்தெடுக்கப்படும் நிபுணர் கமிட்டியும், அந்த வழியே தான் செல்லும் என்ற எண்ணம் பெரும் பாலாருக்கு ஏற்படாமல் இருக்க முடியாது. காரணம், ஆச்சாரியாரின் இந்தக் கல்வித் திட்டம், பொது மக்களின் ஆதரவைப் பெறாமல் அவசரக் கோலத்தில் தனிப்பட்ட முறையில் கொண்டு வரப்பட்டதென்பது மட்டுமல்ல, கல்வி

(அடுத்த பக்கம் பார்க்க)

புனித நாள்!

[ஈ. வி. கே. சம்பத்]

ஜூலை 15-! திராவிடரின் வரலாற்றிலே மறக்கமுடியாத ஓர் புனிதப் பொன்னாள். ஏகாதிபத்திய ஏதேச்சாதிகாரப் போக்கினருக்கு ஓர் பேரிடி. மக்கள் குரலுக்கு, ஆணவ மொழிகளைப் பதிலாய்த் தந்த ஆதிக்கக்காரர்கள் அறிவுபெற உதவிய அந்த ஜூலை 15-ன் வரலாறு என்ன?

சென்ற ஆண்டு ஆகஸ்டு 1-ல் திராவிடம் எங்கும் அண்ணாவின் கட்டளைக்கிணங்க ரயில் நிலையங்களில் உள்ள பெயர்ப் பலகைகளில் எழுதப்பட்டிருந்த இந்தி எழுத்துக்கள் தார்கொண்டு அழிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் குறித்து இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமர் நேரு அவர்கள் சென்னையில் பேசும்போது, இந்தி எழுத்துக்களில் ஏன் ஊர்ப்பெயர்கள் எழுதப்படவேண்டும் என்பதற்குக் காரணம் கூறாமல், இந்தி அழிப்பு ''சிறுபிள்ளைத்தனம்'' ''நான்சென்ஸ்'' என வசைமாரி பொழிந்தார்.

அந்தச் சொல்கேட்டு திராவிடர் கொதித்தனர். கொதித்தெழுந்த மக்களுக்கு அண்ணா முதல் சொன்னார் ''மன்னிப்போம், மறப்போம் என்பதாக இன்று நேரு சிறுபிள்ளைத்தனம் என்றார் நம்மைப்பார்த்து! காலம் வரும், அதுவரை காத்திருப்போம், அப்போது இதே நேரு—சிறுபிள்ளைத்தனம் என்று இப்போது சுடுசொல் வீசிய இதே நேரு, ''வயது வந்தவர்கள், விவரம் அறிந்தவர்கள் இப்படிச் செய்யலாமா என்று பேசிடக் கேட்போம், அதற்குப்பின் ''முதிர்ந்த பேரறிவாளர்களின் முடிவு ஏற்றுக்கொள்கிறேன்'' என இதே நேரு, கூறிடக் கேட்போம். பொறுத்திருப்போம். உறுதியுள்ளவரா திருப்போம்'' என அண்ணா அவர்கள் நாட்டுக்குரைத்தார்கள். எதிரிகளில் ஏளனம் புரிந்தவர் சிலர். அலட்சியப்படுத்தியவர்கள் பலர்.

அண்ணா சொன்ன இரண்டாவது கட்டம் இவ்வளவு விரைவில் ஏற்படும் எனக் கருதியவர்கள் வெகு சிலரே.

சென்ற திங்கள் திருத்தணியில் எல்லைப் போராட்டம் நடந்தபோது அதில் திராவிட முன்னேற்றக் கழகம் பெரும் பங்கெடுத்துச் செயலாற்றியது. அதுபோது அமைதியான முறையில் சில ரயில்களைச் சங்கிலியைப்பிடித்து இழுத்து நிறுத்தினர் தமிழ்ப் பெருமக்கள். தங்கள் கோரிக்கையை அலட்சியம் செய்த நேரு சர்க்கார் உணர்வு பெற்று ஆவன செய்யவேண்டும் என்பதற்காகவே அந்த முறையைக் கையாண்டனர். ஏனெனில் அண்மையில் அந்த முறை ஒன்றுமட்டுமே நேருவின் பல அரசியல் முடிபுகளை மாற்றியுள்ளது என்பதை நன்குணர்ந்த மக்கள் அந்த முறையை ரயில் நிறுத்தக் கிளர்ச்சியை, ஆந்திர சகோதரர்களைவிட, அமைதியான முறையில் நடத்தினர்.

மீண்டும் நேரு பழைய பாணியில் அந்தக் கிளர்ச்சியையும் 'நான்சென்ஸ்' 'முட்டாள்தனமானது' என்று வசைபாடினார்.

முதல் தரம் 'மன்னித்தோம் மறப்போம்' என்றுரைத்த அண்ணா அவர்கள், ''ஜூலை 15-ல் பகலில் ஓடும் ரயில்கள் அனைத்தும் நிற்க வேண்டும். நேருவின் ஆணவமொழிகளை நாடு ஏற்றுக்கொள்ளவில்லை—கண்டிக்கிறது என்பதை அவர் அறிந்து திருந்த அந்த நாள் நாடெங்கும் ரயில்கள் நிறுத்தப்பட வேண்டும்'' என்று கட்டளையிட்டார்கள்.

ஆச்சாரியார் ஆட்சியின் ரத்த வெறி பிடித்த அடக்குமுறைக்கு ஈடுகொடுத்துக்கொண்டு இதுவரை நாட்டில் நடந்திராத அளவுக்கு அந்தக் கிளர்ச்சியை மக்கள் வெற்றிகரமாக நடத்தினர்.

அதன் விளைவு? நாடு முழுங்கியது கண்டு அடக்குமுறையை அவிழ்த்துவிட்ட ஆச்சாரியார் சர்க்கார் முக்காடிட்டுத் திரிகிறது. சட்ட நிபுணர்களைச் சுற்றி அலைகிறது. வழக்கு மன்றங்களை அன்றாடம் ஏறி இறங்குகிறது. சிறைகளில் பலவிதக் குற்றங்களுக்காகத் தண்டனை பெற்ற கைதிகள் கூட்டம் கூட்டமாய் விடுவிக்கப்பட்டு, 'நமக்காக' சிறைகள் காலியாக்கப் படுகின்றன.

இவைகள் எல்லாவற்றையும் விட முக்கியமாக, நேரு புதுப்பாடம் கற்றுக் கொண்டார். மக்கள் கிளர்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிடும் போது எப்படிப்பேசவேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டார்—நான்சென்ஸை மறந்தார்.

லக்னோவில், ஜூலை 15 கிளர்ச்சி பற்றிக் குறிப்பிடுகையில் 'விவரம் அறிந்த அரசியல் வாதிகள் இப்படிச் செய்யலாமா?' என்றார். அண்ணா அவர்கள் முன்பு குறிப்பிட்ட இரண்டாவது கட்டம். திட்டப்படி எல்லாம் நடக்கிறது. நிமிர்ந்திருந்த எதிரிகளை ஜூலை 15 குனியவைத்திருக்கிறது. குனிந்து இருந்த திராவிடர் நிமிர்ந்து விட்டது என்பதை உலகுக்கு அறிவித்த அந்த ஜூலை 15 நாட்டு வரலாற்றில் சிறப்பிடம் பெற்று விட்டது. ஜூலை 15—11 தோழர்களின் உயிரைக்குடித்தது. அன்று கரமிழந்தோர், கண்ணிழந்தோர் தொகை ஏராளம். சிறையில் அடைக்கப்பட்டு அவதியுறுவோர் தொகை ஆயிரக்கணக்கில். ஆனால், அந்த ஜூலை 15, நாடு ஆற்றல்—திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் பின்னே திரண்டிருக்கும் திராவிட மக்களின் தொகையை, தரத்தை — உலகுக்கு அறிவித்த அந்தப் புனிதநாள், ஜூலை 15!!

★

முன்பக்கத் தொடர்ச்சி

நிபுணர்கள் பலரும் இத்திட்டம் நடைமுறைக்கு ஒத்துவாராதது என்ற முடிவுக்கு வந்திருப்பதாலுமே இங்ஙனம் கூறுகிறோம். எனவே, நிபுணர் கமிட்டி இத்திட்டத்தை வைத்து நல்ல முடிவு செய்யும் என்று எதிர்பார்க்கிறோம்.

இத்திட்டத்தைப் பரிசீலிக்க, வேண்டுமானால், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து கூட நிபுணர்களை வரவழைப்பதாகக் கூறி நையாண்டி பண்ணும் ஆச்சாரியாரைப் போலன்றி, தேர்ந்தெடுக்கப்படும் நிபுணர் கமிட்டி, ஆச்சாரியாரின் இந்த நையாண்டிக்குப் பதிலளிக்கும் முறையில் நல்ல தீர்ப்பு வழங்கும் என்று நம்புகிறோம்.

"எதிர்பார்க்கவேண்டும்!"

"ஐயா! இப்படித் தடியால் தாக்கி மண்டைகளை உடைத்து, சித்ர வதை செய்வது, நியாயமா?"

*

"இது போன்ற காரியங்களில் ஈடுபடுவோர், இப்படிப் பட்டவை நடக்குமென்று, எதிர்பார்க்கத்தான் வேண்டும்."

*

சட்டசபையிலே கேட்கப் பட்ட கேள்விக்கு, சதாசர்வகாலமும் ஆண்டவன் நாமத்தைப் பஜித்து ஆத்மசுகம் காணப் போவதாக அடிக்கடி கூறிடும், ராசகோபாலாச்சாரியார், பதில் தந்திருக்கிறார்.

எதிர்பார்க்க வேண்டுமாம்!—தடியடி, கண்ணீர்ப் புகை, துப்பாக்கிக் குண்டுகளை.

நெஞ்சிலே கொள்கையேந்தி, அக்கிரமத்தை ஒழிக்கக் கிளம்பி விட்ட அறப்போர் வீரர்கள் தடியடி தாக்கினாலும், துப்பாக்கி துளைத்தாலும் கவலையில்லை! கவலையிலை!!—என்று வீரப்பண் பாடி விட்டுத்தான், புறப்படுகிறார்கள். இந்த வீரப்பண், திராவிட மறவர்களுக்குமட்டுமல்ல, விடுதலைக்காகப் போராடிடும் எந்த மனிதனுக்கும் எழும்பும். இன்று கொலுவீற்றிருக்கும் காங்கிரஸ் கட்சியின் சுதந்திரப் போரின் போது, திருப்பூர் வீதியிலே குமரன், ஓடஓட அடிக்கப்பட்டான்! பஞ்சாப் சிங்கம் எனப் பாரோர் போற்றும் பகத்சிங், சுகதேவ், ராஜகுரு, எனும் மூன்று வாலிப மலர்களை, தூக்குமேடையிலே ஏற்றினன், வெள்ளையன்! அவர்கள், துவண்டா போனார்கள்? கத்தி கழுத்தில் விழும்போதும், 'வெளிநாட்டான் ஒழிக!' என்ற வீர முழக்கமிட்டனர். ஆவிபிரிந்தது! அதுவும் அந்த முழக்கத்தைத்தான் செய்தது!!

அப்போது, வெள்ளையன், சொன்னதுதான்—"இது போன்ற காரியங்களில் ஈடுபடுவோர் இவைகளைத்தான் அனுபவிக்கவேண்டும்" என்பதாக.

அவன் சிருஷ்டித்துச் சென்ற சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் இந்தச் சிங்காரபுருடர், இப்போது செப்புகிறார். அவன் வைத்துச் சென்ற சட்டமென்னும் கோட்டையிருக்கிறது, அதனைக்காக்க துப்பாக்கிகளும் பீரங்கிகளும் படைவரிசையும் இருக்கிறதெனும், துணிவில்.

எதிர்பார்க்கத் தான் வேண்டுமாம்! — இங்கிலாந்து நாட்டிலேயிருக்கும் சர்ச்சில் துரை, இந்திய உபகண்டத்திலேயிருக்கும் மக்களைப்பார்த்தல்ல, சொல்வது.

திருச்செங்கோட்டிலே பிறந்து, சேலத்திலே வாழ்ந்து, சென்னையிலே கோலோச்சும் தர்பார் சூரர், சொல்கிறார். எதிர்பார்க்கத்தான் வேண்டுமாம்!—எவ்வளவு மனத் துணிவு.

சட்டம் கற்று, வாதாடி, வாழ்க்கை துவக்கிய ஆச்சாரியாரை, இந்த நாட்டின் தர்பார் சூரராக ஆக்கியது, எது? — வீரமா, அல்ல! அல்ல!! — மக்கள் தேர்ந்தெடுத்தனரா, இல்லை! இல்லை!! சுதந்திரத்துக்காகப் போராடியவர் — எனும், விருது ஒன்றே, இவரை, கொலு பீடத்தில் அமரும், அருகதையைத் தந்தது. அவர், விடுதலை வீரர்களை, வீறுப்புடன் பார்க்கிறார்! 'பார், பார்! என்னிடம் பளபளக்கும் 'பயனட்' உண்டு—கண்ணை அவிக்கும் 'புகை' உண்டு—தடி உண்டு—அடிக்க ஆட்கள் உண்டு', எனும் அதிகாரப் போதையுடன், எதிர்பார்க்கத்தான், வேண்டுமாம்—எதனை?—இதோ தோழர்கள் தென்படுகிறார்களே, இந்தக் காட்சியை!

'வெளிநாட்டானதிக்கம் ஒழிக! வர்ணாசிரமக் கல்வி முறை ஒழிக!' என்று அமைதியோடு, கூறிக்கொண்டு சென்றனர். அதற்குத்தான், இந்தப் பரிசு! ஆச்சாரியார் வழங்கிய பரிசு.

எதிரிகள் புகாதபடி எஃகு அரண் அமைத்து, பீரங்கியும் படைவரிசையும் நிறுத்தி, தங்களைக் காத்துக் கொள்வார்களாம், மன்னர்கள்.

பி. கோவிந்தன்

அமிர்தநாயகம்

வி: ஏ. தாஸ்

டி. டி. கிருஷ்ணன்

ஆச்சாரியார், மன்னரல்ல—செங்கோலேந்திய பரம்பரையைச் சேர்ந்தவருமல்ல. ஆனால், அவர் வாழும் தியாகர் திருநகரினைச் சென்று பாருங்கள்—அப்பப்பா, எவ்வளவு பெரிய போலீஸ்படை! எத்தனை விதமான வரிசைகள்!!

சர்வாதிகார ஹிட்லர், மக்கள் மன்றத்தில் உலவவந்தால், கவசமூடிய மோட்டாரில்தான் பவனி செல்வானாம்.

ஆச்சாரியார், ஹிட்லரல்ல—ஆனால், அவர் புறப்பட்டுச் செல்லும் காட்சி, எவ்வளவு விந்தையாயிருக்கிறது.

'தன்னைச் சுற்றி, இத்தகைய அரண் அமைத்துக்கொண்டு, 'திராவிடநாடு திராவிடருக்கே!' என்று முழக்கமிட்டவண்ணம் அமைதியோடுவரும் அறப்போர் வீரர்களை, எதிரிகளாகப் பாவிக்கிறார் — ஏவிவிடுகிறார், படைவரிசையினை.

'ஐயோ, ஏனிந்த அக்கிரமம்?' என்று எவராவது கேட்டால், இவைகளை எதிர்பார்க்கத்தான் வேண்டும் அவர்கள், என்று செப்புகிறார். ஆச்சாரியார் குடியிருக்கும் தெரு, ஒரு அயல் நாடு அல்ல! அதனை நோக்கிச் செல்லும் நாமும், பிறநாட்டு, படைவரிசையல்ல!!

தியாகர் திருநகர்—நம்முடையது—அவருக்கும் வாழ வசதிதருவது.

ஆனால், அவர் தெரிவிக்கிறார்—நாமென்னவோ, இரதகஜதுரகபதாதிகளோடு செல்லும் வேற்று நாட்டினர் போலவும், அவைகளை எதிர்த்து மடக்கவேண்டிய மன்னாதி மன்னர்போலவும், தன்னை நினைத்துக்கொண்டு.

சட்டசபையில் செப்பியது—எதிர்பார்க்கத்தான் வேண்டும்!

மேல் சபையில், அதைவிட ஒருபடி மேலே சென்று, பேசுகிறார்—"இவர்களைக்கண்டு, நானா, அஞ்சுவேன்? அஞ்சுவதோ, விட்டு விடுவதோ, அரசாங்கத்தின் நோக்கமல்ல. தைரியத்தோடு நின்று ஒரு கை, பார்க்கத்தான்வேண்டும்" என்பதுபோல.

அஞ்சமாட்டோம்! அடக்கிடுவாராம்!! — ஆச்சாரியார், சொல்கிறார், இவ்விதம்.

ஏனிவர், அஞ்சவேண்டுமோ?—அறியோம், நாம். நாம், எதிரிநாட்டிலிருந்து, எக்காளம் எழுப்பிச் செல்வோரல்ல, இந்நாட்டு மக்கள்.

நாட்டினைக் காடாக்கும் நோக்கம் கொண்ட கல்வி முறைத் திட்டத்தைக் கண்டித்தோம்—கேளாக்காதினராக ஆனார்—தீர்மானங்கள் அனுப்பினோம்—ஏறெடுத்துப் பார்க்கவில்லை — எனவே, நமது கோரிக்கையைத் தெரிவிக்க, அறப்போர், புரிகிறோம்.

அவரோ, ஆர்ப்பரிக்கிறார். 'என்னை' எதிர்க்கிறார்கள், இவர்களை விடப்போவதில்லை, நான்!—என்று கர்ஜிக்கிறார்.

கணைகளைப் பூட்டுகிறார்! கால், கை—ஒடிகிறது! மண்டை உடைகிறது! மனிதர்களின் உடல்கள் தழும்புகளால் நிரம்புகிறது!

இதுபோன்ற தழும்புகள், அதிகமாவது—ஒரு ஆட்சியின், எதேச்சாதிகாரத்துக்கு எடுத்துக்காட்டு.

இன்று தழும்புகள் பெறுவோர், நாளை, அரசுக் கட்டிலுக்குச் சொந்தக்காரர் ஆவர்.

இந்த அரசியல் சரித்திரம், ஆச்சாரியார் அறியாததல்ல.

இன்று அதிகார போதையில் ஆர்ப்பரிக்கிறார்.

நாளை! நாளை!! — நம்மை, எதிர்பார்க்கவேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன.

அதிகார போதை தெளியட்டும்

"இயற்கைக் கடனைக் கழிக்கப் போனால் தண்ணீர் கிடையாது"

*

"அரசாங்கத்தார் எங்கள் எல்லோரையும் சகல விதத்திலும் சாதாரணக் கைதிகளைப்போலவே நடத்தத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. அப்படியில்லையானால் அவர்கள் அலட்சியமாயிருக்கிறார்கள் என்றுதான் கூறவேண்டும். சாதாரணக் கைதிகளுக்குக் கொடுக்கும் உணவையே எங்களுக்கும் கொடுக்கிறார்கள். அவர்களை அடைத்துத் திறக்கும் நேரத்திலேயே எங்களையும் அடைத்துத் திறக்கிறார்கள். அவர்களைப் போலவே நாங்களும் அசுத்தமான தரைமீது நின்றுகொண்டோ அல்லது உட்கார்ந்துகொண்டோதான், உணவைப், பிச்சைக்காரர்கள் மாதிரி அவசரமாக அள்ளி அள்ளிச் சாப்பிடவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால், இந்தமாதிரி நடத்துவதைக்கொண்டு அவர்கள் எங்களைப் பணியவைத்துவிடமுடியாது. இது நம் மனதை மேலும் திடப்படுத்தவும் அதிக தியாகம் செய்யும்படி தூண்டவுமேசெய்யும் என்பது அரசாங்கத்தாருக்குத் தெரியாது"

*

"மாப்பிள்ளைமார்க் கலகத்தின் காரணமாகத் தண்டனை பெற்றவர்களிடம் அளவு கடந்து வேலைவாங்குகிறார்கள். அதைக் காண அதிக வேதனையாக இருக்கிறது. அவர்கள் சன்மார்க்க விரோதமான காரியம் எதுவும் செய்தவர்களல்ல. அவர்கள் தலைவர்கள் சுதந்தரம் பெறவும், மதத்தைக் காப்பாற்றவும், பாலங்களை இடிக்குமாறும், தந்திக் கம்பிகளை அறுக்குமாறும் உபதேசித்தார்கள். அதைக் கேட்டு அவர்கள் அப்படியேசெய்தார்கள். அவ்வளவுதான். அதற்காக அவர்களை இப்படிக் கஷ்டப்படுத்த வேண்டுமா?"

*

"அரசியல் கைதிகளின் நிலைமையைப் பார்ப்போம். அவர்களில் ஒருவரை பத்து அடி சதுரமான ஒரு அறையில் காற்றும் வெளிச்சமும் இல்லாதபடி அடைத்துப் போட்டு வைப்பது எத்தனை அக்கிர

மம்பாருங்கள். குற்றவாளிகளை ஜனங்களிடமிருந்து பிரித்துச் சிறையிலிடுவது கூடத் தவறு என்பதே என் கருத்து. அதாவது போகட்டும். ஆரோக்கிய வாழ்வுக்கு அத்தியாவசியமான காற்று முதலிய இன்றியமையாத பொருள்களை அவர்களுக்குக் கிடைக்கவொட்டாமல் செய்யும் கொள்கையை என்னென்று கூறுவது? அறிவுடையதோ அறிவில்லாததோ? அந்தக் கொள்கைக்கு அணுவளவு கூட நியாயம் கிடையாது.”

*

“வைத்தியசாலை நிறைய மூட்டைப்பூச்சி. அதனால் அதை நரகம் என்றே கூறலாம். எல்லாப் பகுதிகளிலும் இப்படித்தான் என்று கூறுகிறார்கள். அறைகளில் மூட்டுப் பூச்சிகளுடன் சிலைப்பேனும் சிறு வண்டுகளும் அதிகம். குளிப்பதற்காகக் கிடைக்கும் ஜலம் எவ்வளவு தெரியுமா? சொன்னால் சிறைக்கு வராதவர்கள் நம்பமாட்டார்கள். தலையில் விட்டால் உடலும் நனையாது, உடையும் நனையாது. உடனே துடைத்துக்கொண்டு வந்துவிட வேண்டியதுதான்”

*

“சேலத்தில் கலெக்டரைக் கொன்றுவிட்டதாக ஒரு செய்தி கூறுகிறார்கள். எந்தவிதத்திலேனும் பலாத்காரம் நடைபெறவேண்டும் என்று யாரோ விரும்புவதுபோல் தோன்றுகிறது”

*

“சென்னையில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததாம். அரை டஜன் பேர் யமலோகம் சென்றார்கள். எல்லாம் போலீஸ் அதிகாரிகள்மீது யாரோ சிலர் கற்களை எறிந்ததற்காகத்தானாம்.”

* * *

ரயில் நிறுத்தப் போராட்டத்திலோ, புதிய ஆரம்பக் கல்வித்திட்டத்தை எதிர்த்து சிறை சென்றுள்ள தோழர்களில் யாரோ ஒருவர், தான் சிறையில்படும் அவதியினை எழுதியிருக்கிறார் என்று, உங்கள் அனைவருக்கும் எண்ணத் தோன்றும்.

மேலே குறிப்பிட்ட கொடுமைகளைக் காட்டிலும் மிக மட்டமாக நம் தோழர்கள் நடத்தப்படுகிறார்கள் என்றாலும்–அவர்களில் யாரும் இதை எழுதவில்லை.

காங்கிரஸ் அரசாங்கத்தினரைக் குறை கூறும் கம்யூனிஸ்டுகளாக இருக்கலாம் என எண்ணுவீர்கள்–அவர்களும் தந்ததல்ல — இந்தக் குறிப்பினை.

இந்தக் குறிப்பினைத் தந்தவரை நீங்கள் அறிந்தால், உண்மையில் ஆச்சரியப்படுவீர்கள்—அவரா இப்படி எழுதினார் என்று கேள்விக் குறியையும் போடுவீர்கள்.

இந்தக் குறிப்பினைத் தந்தவர், 1921-ம் ஆண்டு காந்தியாரின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு மூன்றுமாத சிறைவாசத்தை வேலூரில் கழித்தவர்— தன்னுடைய சிறையனுபவத்தை ‘ரசமான குறிப்பு’களுடன் 12—12—47-முதல் ‘வெள்ளி மணி’ எனும் வார இதழிலே ‘சிறையிலே தவம்’ என்ற தலைப்பில் வெளிவரச் செய்தவர்–இன்றைய சென்னை முதலமைச்சர் —‘கனம்’ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள்தான்!

சிந்தை நொந்து இவைகளையெல்லாம் செப்பியிருக்கிறார்–சி. ஆர்.

அன்னியன் ஆட்சியிருந்த அன்றுவது, சாதாரணக் கைதிகளைப் போல இவர்களை நடத்தினான். இன்று — இராமராஜ்ய சர்க்காரில் அரசியல் கைதிகளை நடத்தும் முறையும், சிறைச்சாலையும் அதைவிடக் கேவலமாகவன்றோ இருக்கிறது!

பலாத்காரத்தில் ஈடுபட்டவர்களுக்காகப் பரிந்து பேசியவர்தான், அறப்போரிலீடுபட்ட தோழர்களை தடியால் அடிக்கச் செய்கிறார்—கண்ணீர்ப் புகையை விடுகிறார்–துப்பாக்கிக் குண்டுகளைப் பொழிகிறார்.

‘எந்த விதத்திலேனும் பலாத்காரம் நடைபெறவேண்டும் என்று யாரோ விருப்புபவர்கள்தான், கலெக்டரைக் கொன்றார்கள் என்று அன்று கூறிய ஆச்சாரியார், இன்று தூத்துக்குடியை அடுத்த புதுக்கிராமச் சம்பவத்தை நம்முடன் பிணைக்கப் பார்க்கும் ‘பொதுநல’ நோக்கம் என்ன? என்று கேட்கிறோம்.

‘போலீஸ் அதிகாரியின் கால்மீது யாரோ சிலர் கற்களை எறிந்ததற்காகத்தானாம் — சென்னையில் துப்பாக்கிப்பிரயோகம் நடந்தது — அரை டஜன்பேர் யமலோகம் சென்றார்கள்’ என்று கூறும் மாஜி கைதிதான், இன்று தூத்துக்குடியிலும், கல்லக்குடியிலும் யாரோ சிலர் கற்களை வீசியதற்காகச் சுட்டிருக்கிறார். கற்களை எறிந்ததற்கு சுடுவதா என்ற தோரணையில் எழுதியிருக்கும் ஆச்சாரியார், அதே கற்களை எறிந்ததற்கு சுடச்சொல்லியிருக்கிறார்—சுட்டது நியாயம் எனவும் வாதாடுகிறார். இப்படிப்பட்டவரை எந்தப் பட்டியலில் சேர்ப்பதென்னும் பொறுப்பை நாட்டோராகிய நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

‘குற்றவாளிகளை ஜனங்களிடமிருந்து பிரித்துச் சிறையிலிடுவது கூடத் தவறு என்பதே என் கருத்து’ என்று குற்றவாளிகளுக்காகப் பரிந்து எழுதியவர்தான் – இன்று குற்றம் புரியாத அரசியல் கைதிகளை சிறையிலிடுகிறார் — சித்திரவதை செய்கிறார்.

நமது அறப்போர் வீரர்களுக்குச் சிறையிலே—களி உணவு. குடிக்க நல்ல தண்ணீர் கிடையாது—இராமராஜ்ய சர்க்காரில் — ‘மாஜி கைதி’யின் ஆட்சியில்.

அன்று, அவர், சிறையில் இருந்தார்! — கொடுமைகள் கூடாது, ஆகாது என்றார்.

இன்று, செங்கோலோச்சுகிறார்–கொடுமைகள் புரிகிறார் — புரிவதுதான் பொறுப்பிலிருப்பவரின் கடமை என்கிறார்.

அன்று—கொடுமைகளைக் கண்டு சிந்தை நொந்தார்!

இன்று—கொடுமை புரிவதே கொள்கை என்கிறார்.

சிறையிலிருந்தகாலத்தில் முறை தெரிந்தது!

செங்கோலேந்தியுள்ள காலத்தில், செருக்கு, முறையை-நீதியை மறைக்கிறது.

கைதி நிலையிலே–கண்ணியம் இருந்தது!

அதிகார போதையிலே—ஆணவம் மிளிர்கிறது!

பழைய கைதி நிலையினை, ஆச்சாரியார் எண்ணிப்பார்க்கவேண்டுகிறோம்.

எண்ணிப் பார்த்தால், இன்று அவர் அரசியல் கைதிகளை நடத்தும் காட்டுமிராண்டித்தனம் நன்கு விளங்கும் என்பதற்காகவே, அவர் தயாரித்த ‘ரசமான குறிப்புகளை’ அவர் பருக வைத்திருக்கிறோம்.

இந்தப் பழைய ‘ரச’த்தைப் பருகியாவது, ஆச்சாரியாரின் அதிகார போதை தெளியட்டும்!

நம்முடைய வளர்ச்சியைக் காட்டுகிறது

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிப் பிரயோக' சம்பவத்தைத் தவிர, வேறு, மக்கள் மனதைக் கவரக்கூடிய சம்பவம் ஏதாவது நடைபெற்றிருக்கிறதா? கூற முடியுமா இந்தக் கன்றுக்குட்டிகளால்?

15—7—53-ல் துப்பாக்கிப் பிரயோகம்! 26—7—53-ல் பல்லாவரத்தில் காங்கிரஸ் மாநாடு! இடையே பத்து நாட்கள்! இந்தப் பத்து நாட்களில் நடைபெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தைத் தவிர, வேறெதுவும் மக்கள் மனதைக் கவர்ந்திருக்க முடியாது. எனவே தான், ஒரே நாளில் பத்துக்கு மேற்பட்டவர்களைத் துப்பாக்கிக்கு இரையாக்கியது போதாதென்று, நூற்றுக்கு மேற்பட்டவர்களைப் படுகாயமும் படுத்திய சர்க்காரை ஒரு கன்றுக்குட்டி என்று 'கனம்' ஆச்சாரியார் கூறும் துணிவைப் பெற்றுவிட்டாரே என்றெண்ணியதும், அந்த மாநாட்டில் குழுமி இருந்தவர்களுக்குச் சிரிப்பு வந்துவிட்டதென்று கூறுவது எப்படித் தவறாக இருக்க முடியும்?

*

இனி, இந்தப் புதுக் கல்வித் திட்டத்தை எதிர்ப்பவர்களை இரு கட்சிக்காரர்களாக்கி, ஒரு கட்சிக்காரர்கள், ரயில்களை நிறுத்துவதன் மூலம் புதுக் கல்வித் திட்டத்தை எதிர்க்கிறார்கள் என்றும், இன்னொரு கட்சிக்காரர்கள் பள்ளிக்கூடங்கள் முன் மறியல் செய்வதன்வாயிலாக எதிர்க்கிறார்கள் என்றும் ஆச்சாரியார் கூறுகிறார்.

"ரயிலை நிறுத்துவதற்கும் கல்விக்கும் என்ன சம்பந்தம்"

என்று கேட்கிறார். ரயிலுக்கும் கல்விக்கும் சம்பந்தம் இருப்பதாக யார்—எப்போது கூறினார்கள்? திராவிட முன்னேற்றக் கழகத்தினரான எங்களால் நடத்தப்பட்ட ரயில் நிறுத்தக் கிளர்ச்சிக்கும், கல்வித் திட்டத்துக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என்று பல அறிக்கைகள் வெளியிடப்பட்டபின்னரும் சட்டசபையில், மக்களின் பிரதிநிதிகளாக வந்திருக்கும் எம். எல். ஏக்கள் பலர் விளக்கிக்கூறியபின்னரும் கேளாக் காதராகிய ஆச்சாரியார் கல்வியையும் ரயிலையும் தொடர்புபடுத்திப் பேசுவதைப் பார்க்கும்போது, 'கழுதைக்கு உபதேசம் காதிலே உரைத்தாலும்....'' என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது. ரயில் நிறுத்தம், பண்டித நேருவின் ஆணவத்தை நாடறியச் செய்வதற்காக நடத்தப்பட்டது. ஆச்சாரியார் வீட்டுமுன் மறியல், அவரது ஆணவமும் அறியாமையும் சம எடையாகக் கலந்து, கொண்டுவரப்பட்டிருக்கும் புதுக் கல்வித் திட்டத்தை எதிர்க்கும் அறிகுறியாகச் செய்யப்படுவது. இது இரண்டையும் ஒன்றாக்கிக் குழப்புவது குல்லுகப்பட்டரின் குயுக்திகளில் ஒன்றுபோலும்!

ஒரு வேளை, நாம் ரயில்நிறுத்தத்தில் ஈடுபட்டது எதற்கென்று தெரியாமல் பண்டித நேரு பதட்டமாகப் பேசிவிட்டார் என்று வைத்துக் கொண்டாலும், நம்முடன் இருப்பவரே, அதிலும், தம்முடைய வீட்டின் முன் நடைபெறும் மறியல் எதற்காக என்பதனை நன்கறிந்தவரே, ரயில் நிறுத்தத்தைக் கல்வித் திட்ட எதிர்ப்புடன் தொடர்புபடுத்திப்பேசுகிறார் என்றால், இதைவிட எள்ளிநகையாடக்கூடிய செய்தி வேறேதாவது இருக்கமுடியுமா?

*

திராவிடமுன்னேற்றக் கழகத்தாராகிய நாம், நேரு, நம்மையெல்லாம் முட்டாள் என்று கூறியதைக் கண்டிக்க ரயில் நிறுத்தம் செய்தோர், அதன் காரணமாக 3000க்குமேற்பட்ட முன்னணி வீரர்கள் சிறைப்படுத்தப் பட்டுள்ளனர்—இது நம்முடைய வளர்ச்சியைக் காட்டுகிறது.

வடநாட்டாதிக்கத்தை எதிர்க்கும் அறிகுறியாகச் செய்யப்படும் கல்லக்குடிப் போராட்டத்தைக் கழகமுதல்வர்களில் ஒருவரானதோழர் கருணாநிதி தலைமை வகித்து நடத்தினார்—அதோ அவர் சிறையில் 300-க்கு மேற்பட்ட கழக வீரர்களுடன்!—அவர்கள் சிறைப்பட்டதால் போராட்டம் நின்று விட்டதா? இல்லை இதோ, தோழர் சிற்றரசு அவர்கள் அந்தப் பணியைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்—இது நம்முடைய வளர்ச்சியைக்காட்டுகிறது.

ஆச்சாரியாரால்கொண்டுவரப்பட்டிருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டத்தை எதிர்த்து நடத்தும் போராட்டமாக ஆச்சாரியார் வீட்டு முன் மறியல் நடத்துவதென்ற முடிவுக்கு வந்து, முதல் நாள் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமையில் தொடங்கப்பட்ட மறியல், நாள்தோறும், [illegible]ச் சிறைக்குள் அனுப்பிய வண்ணம், சட்டசபை நடக்கும் வரையில் நடத்துவதென்ற முடிவோடு நடத்தப்படுகிறது. அமைதியான முறையில் மறியல்செய்யும் தோழர்கள்மீது தடியடியும் கண்ணீர்ப்புகையும் 'பரிசாக'த் தரப்பட்டபோதிலும், ஆர்வம் குறையாத முறையில் மறியல் நடப்பதும் அதற்காக நூற்றுக்கணக்கானவர்கள் சிறைசெல்வதும்—நம்முடைய வளர்ச்சியைக் காட்டுகிறது.

இந்த மூன்று திட்டங்களையும் நிறைவேற்றி வைப்பதற்காகக் கூடியிருந்த தி. மு. க. செயற்குழுவினரில் ஐவரைக் காவலில் வைத்து, இப்போது, பலவிதமான செக்ஷன்களை அவர்கள்மீது ஏவி வழக்குத் தொடுத்திருப்பதறிந்தும், சர்க்கார் நினைத்தால், அந்தச் செக்ஷன்களின்படி அவர்களை ஆண்டுக்கணக்கில் சிறைக்குள் பூட்டி வைத்திருக்கலாம் என்பதறிந்தும், மக்கள் அந்தத் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதில் ஆர்வங்கொண்டு சிறைக்குச் செல்ல முன்வருவது — நம்முடைய வளர்ச்சியைக் காட்டுகிறது.

அறிந்தோ அறியாமலோ பண்டித நேரு, ரயில் நிறுத்தத்திற்கு வேறு காரணம் காட்டிப் பேசி, உண்மையை மறைக்க முயல்வது—நம்முடைய வளர்ச்சியைக் காட்டுகிறது.

கீழ்குப்பம்—கண்டிக்கிறது

அரக்கோணம் தாலுக்காவைச் சேர்ந்த கீழ் குப்பம் கிராமத்தின் பஞ்சாயத்துக் கூட்டம் 25-7-53 ல் தலைவர் எல். புருஷோத்தம் அவர்கள் தலைமையில் கூடி, ஆச்சாரியாரால் கொண்டுவரப்பட்டிருக்கும் வர்ணாஸ்ரமக் கல்வித் திட்டத்தைக் கண்டித்து, ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியது.

மறைந்து நின்று காரியமாற்றும் மறையவர்

நம்முடைய நோக்கம் எது என்பதைப் பரிபூரணமாக அறிந்தும், அறியாதவர்போல் ஆஷாடபூதியாக ஆச்சாரியார் நடப்பது—நம்முடைய வளர்ச்சியைக் காட்டுகிறது.

காக்கை எதையோ கிளறுவது போல் கனவு காணுமாமே! அது போல, நாம் நம்முடைய உரிமைக்காக, ஏதாவதொரு கிளர்ச்சியை நியாயமான முறையில் நடத்திக் கொண்டிருக்கும் சமயத்தில், நமக்குச் சம்பந்தமில்லாத காலிகளும் கூலிகளும் யாதாயினும் அக்கிரமங்களைச் செய்தால், அதனையும் நாம் தான் செய்கிறோம் என்று கனவு கண்டு, தப்புக்கணக்குப்போடுவதும், அதற்காகக் குறிப்பிட்ட சில பகுதிகளில் போலீஸ் பந்தோபஸ்து ஏற்படுத்துவதும்—நம்முடைய வளர்ச்சியைக் காட்டுகிறது.

நாட்டில் நமக்கிருக்கும் ஆதரவையும் செல்வாக்கையும் அறிந்திருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி, ஒவ்வோர் சமயங்களில் தங்களுடன் ஒத்துழைக்கும்படி அழைப்பனுப்புவதும் அறிக்கை வெளியிடுவதும், அதன் தலைமை ஏதாவது தாக்கீதை அனுப்பினால், உடனே இங்குள்ள சூழ்நிலையையும் இதர கட்சிகளின் போக்கையும் மறந்து—சமயம் நேரும்போது நம்முடைய திட்டங்களை எதிர்த்து அறிக்கை விடுவதும், மீண்டும் உடனே நம்முடைய திட்டத்தை ஆதரிப்பனதத்தவிர வேறுவழியில்லை என்பதை உணரும்போது, நம்மை அணைக்க வருவதும் — நம்முடைய வளர்ச்சியைக் காட்டுகிறது

இப்படி, ஒரே சமயத்தில் பல விதமான திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடிய அளவுக்கு, நாம் செல்வாக்கும், ஆதரவும் பெற்றுவிட்டோம் என்பதை அறிந்த சர்க்கார், பொறுமைக் கண்களால் நம்மை நோக்கியவண்ணம், நம்மீது எந்தெந்தச் செக்ஷன்களைப் போட்டு எப்படியெப்படி நம்மை அடக்கலாம் என்ற நிலைமைக்கு வந்திருப்பது மொத்தத்தில்—நம்முடைய வளர்ச்சியைக் காட்டுகிறது.

எனவே, நம்முடைய வளர்ச்சியைப் பார்த்து நாமே ஆச்சரியப்படக்கூடிய அளவுக்கு நமக்கு ஆதரவு இருப்பது மற்றவர்களுக்குப் பொறாமையை உண்டாக்குவதாகத்தானிருக்கும். என்றபோதிலும், நாம் அவர்களைப் பார்த்துப் பொறாமைப்படாமல், அவர்களில் பலர் நம்முடன் வருகிறார்கள் — வந்து கொண்டிருக்கிறார்கள் — வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற பூரிப்போடு பணியாற்றி வருகிறோம்.

*

இனிப், பெரியார் அவர்களால் நடத்தப்படும் கல்வித்திட்ட எதிர்ப்பு மறியலை நையாண்டி பண்ண முன்வந்த ஆச்சாரியார்,

> "மூன்று மணி நேரக் கல்வி போதும் என்பதற்கு நான் விளக்கம் கூறியிருக்கிறேன். அது தப்போ, சரியோ, எப்படியாகிலும் போகட்டும். இதனை ஆட்சேபிக்கும் கழகத்தினர் செய்வது என்ன? அந்த மூன்று மணி நேரமும் வேண்டாமென்று பள்ளிக் கூடங்களை மறியல் செய்கின்றனர்"

என்று பேசியிருக்கிறார். இவ்விதம் கூறி, ஆச்சாரியார், தம்முடைய ஆரம்பக்கல்வித் திட்டத்தின் அடிப்படை நோக்கத்தையே மறைக்கப் பார்க்கிறார். "இந்தக் கல்வித்திட்டத்தில் காணப்படும் அம்சங்கள் எல்லாம் சரிதான், ஆனால், ஒரு குறைதான் அதிலுள்ளது. அது, கல்வி நேரத்தை மூன்று மணியாகக் குறைத்திருப்பதுதான்" என்று பெரியார் அவர்களும் மற்றும் எதிர்ப்பாளர்களும் நினைத்துக் கொண்டு மறியல் செய்கிறார்கள் என்று பேசுவதன் வாயிலாகக் அத்திட்டத்தின் அடிப்படை நோக்கமான வர்ணாசிரமத்தை நிலைநாட்ட முயற்சிப்பதை மறைத்துவிடலாம் என்று மனப்பால் குடிக்கிறார், மறைந்து நின்று காரியம் சாதிக்கும் மரபில்வந்த மறையவர், மந்திரியாக இருக்கிறேன் என்ற ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு.

மேலும் அந்த மமதையாளர் கூறுகிறார்,

> "பெரிய மீசையும் தாடியும் வைத்துக் கொண்டு போகிறவர்களைக் கண்டு, ராட்சசர்களோ என்று குழந்தைகள் பயப்படுகின்றனர்."

என்பதாக! பெரியார் ஒரு ராட்சசராம்! கூறுகிறார் சுரர், பெரியாரைப் பார்த்து அசுரர் என்று! பெரியார் தாடியும் மீசையும்வைத்திருப்பதால் அவர் ஒரு ராட்சசராம்! அவரைக் கண்டதும் குழந்தைகள் பயப்படுகின்றனராம்! அந்த ராட்சசரைக் கண்டு பயப்பட்டதாக எத்தனை குழந்தைகள், தங்களை இந்த ராட்சசனிடமிருந்து பாதுகாக்கும் படி மனுப் போட்டிருக்கின்றனர் என்ற பட்டியலை, மக்களை ராட்சசராக்கும் மனுவின் மரபில் வந்த மறையவர் தர முடியுமா?

அன்று, இராமாயணத்தில், திராவிடர்கள் ராட்சசர்களாக்கப்பட்டனர். இன்று, இராமாயணத்தை அடிப்படையாக வைத்து இராம ராஜ்யத்தை நடத்தும் சுரர் கூட்டம், திராவிடர்களை ராட்சசர்களாக்கிப் பேசுகின்றனர். எவ்வளவு துணிவிருந்தால் இப்படியெல்லாம் பேசமுடிகிறது இந்தச் சுரர் கூட்டத் தலைவனால்! இன்று பெரியாரை ராட்சசன் என்று கூறும் துணிவைப்பெற்ற ஆச்சாரியார், நாளைக்கு, காமராசரையும் மற்றும் காங்கிரசில் இருக்கும் திராவிடர்களையும் ராட்சசர்கள் என்ற பெயரால் அழைக்க மாட்டார் என்று யார் கூற முடியும்! ஆந்திரப் பிரிவினைக்குப் பின், பல காங்கிரஸ் திராவிடர்கள் ராட்சசர் பட்டியலில் கட்டாயம் சேர்க்கப்படுவர் என்பதை "ராஜாஜி ஒருவரே எங்கள் வழிகாட்டி" என்று நம்பியிருக்கும் பலர் கட்டாயம் உணரத்தான் போகிறார்கள். "இவர்கள் எல்லாரும் வீபீஷணர்கள் என்று நம்பி இருந்தேன், இப்போ பார்த்தால், பலர், இந்திரசித்தாக — வாலியாக மாறி விட்டார்களே" என்று மனம் வெம்பி வசவுமாரி பொழியத்தான் போகிறார். "அது எப்படியோ போகட்டும். அது, அவர்களுடைய (காங்கிரஸ்காரர்களுடைய) விஷயம்" என்று எண்ணிக் கொண்டு நம்மால் வாளா இருக்க முடிகிறதா?

"நாமெல்லோரும் திராவிடர்கள் தானே! என்றைக்காவது ஒரு நாள் ஒன்று சேரப்போகிறவர்கள்தானே!

...ன்று, அவர்களின்கூடாரம்வேறாக இருந்த போதிலும், நாளை, நம்முடைய கூடாரத்துக்கு வந்து சேர வேண்டியவர்கள்தானே!'' என்பதை நாம்எண்ணும் போது, பெரியாரை ராட்சசர் என்று கூறிய ஆச்சாரியாரின் துடுக்கை அடக்கும் ஆண்மை அந்தக் கூடாரத்தில் இருப்பவர்களுக்கு ஏற்படவில்லையே என்று தான் வருந்துகிறோம்! பெரியாரை ராட்சசர் என்று கூறியதற்கு மன்னிப்புக் கேட்கும்படி ஆச்சாரியாரை வற்புறுத்தக், காங்கிரசில் இருக்கும் மானமுள்ள திராவிடர்கள் ஏன்முன் வரவில்லை என்று கேட்கிறோம்!

ஒரு இனமக்களின் தலைவரை — ஒரு பெரும் இயக்கத்தின் தலைவரைப் பார்த்து, ஒருவர், தனக்கிருக்கும் அதிகார பலத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு, ராட்சசன் என்று நையாண்டி செய்கிறார் என்றால், அது, விளையாட்டுக்குப்பேசப்படும் ஒரு 'தமாஷ்'என்று யார்தான் கருதமுடியும்!

அதோடு நின்றுவிடவில்லை, அந்த அந்தணர் தலைவர்! திராவிட இயக்கத்தவராகிய நாம், (தி. க., தி.மு.க. ஆகிய இரு கட்சிகளும்) செய்கின்ற காரியங்களுக்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்போவதாகவும், அதற்குப் பொதுமக்கள் ஆதரவு தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறார். நம்மை அடக்க,

''யோசித்து ஏதாவது செய்தால், அதற்குப் பொது மக்கள் எல்லாரும் ஆதரவு கொடுக்க வேண்டும்''

என்று கேட்டுக்கொள்கிறார். திராவிட மக்களாகிய எம்மை அடக்க இப்போது கையாளப்பட்ட முறைகள் எல்லாம் யோசியாமல் சர்வ சாதாரணமாகச் செய்யப்பட்டகாரியங்களாம். அதாவது, தடியடி, கண்ணீர்ப்புகை, துப்பாக்கிப் பிரயோகம், சிறை முதலான 'நல்ல செயல்கள்' எல்லாம் சர்வசாதாரணமானவைகளாம்! இனிமேல், யோசித்துச் செய்யப்படவேண்டிய பல 'நல்ல செயல்கள்' உள்ளனவாம்! அந்த 'நல்ல செயல்களை' நம் மீது ஏவும்போது பொதுமக்கள் பக்கத்துணையாக இருந்து ஆதரிக்க வேண்டுமாம்! யோசித்துச் செய்யப்படவேண்டியவை எவை என்பது இன்னும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படவில்லை. சித்ரவதை, தூக்குமரம், நஞ்சூட்டல், நாடுகடத்தல் போன்ற பல, கலீலியோ, சாக்ரட்டீஸ் போன்ற சீர்திருத்தவாதிகள் நாட்டில் உலவிய காலத்தில், அக்கால அரசர்களால் செய்யப்பட்டன என்று சரித்திரங்கள் கூறுகின்றன.

ஆனால் ஆச்சாரியாரால் யோசித்துச்செய்யப்பட இருக்கும் 'செயல்' என்ன என்பது தெரியவில்லை—தெரிவிக்கவும் இல்லை. என்ற போதிலும், இனி எடுக்கப்படும் நடவடிக்கை, துப்பாக்கியைவிட, கண்ணீர்ப்புகையைவிட, தடியடியைவிடச்,சிறையைவிடக் கடுமையானதாக இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக ஒரு வதந்தி உலவுகிறது. ஆனால் எது எப்படி இருந்தபோதிலும், மானம் ஒன்றுக்காகவே மன்பதையில் வாழும் மரபில் வந்த திராவிடர்கள், இந்த மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சித் தங்கள்உரிமைப் போராட்டத்தைமட்டும் நிறுத்திவிடமாட்டார்கள் என்பதை மமதையோடு ஆட்சி புரியும் பசுவுக்கும் அதன் கன்றுக்குட்டிகளுக்கும் அறிவுறுத்துகிறோம்.

ஆச்சாரியார் ஆட்சியில் 64 ரவுண்டுகள்

21—7—53-ல் சென்னை சட்டசபையில் தூத்துக்குடி கல்லக்குடி துப்பாக்கிப்பிரயோகம்பற்றிக் கொண்டுவந்த அவசரத் தீர்மானத்தின்போது தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் பேசியதன் சுருக்கம்:-

''கல்லக்குடியிலும், தூத்துக்குடியிலும் மக்கள் சுட்டுக்கொல்லப்பட்ட நிகழ்ச்சி சம்பந்தமாக விவாதத்திற்கு வந்திருக்கிற அவசரப் பிரேரபணையின்மீது பேசுகின்றபோது என் நெஞ்சம் குமுறுகிறது. மக்களின் உயிர்களைத் திரணமாக மதித்து, நாய்களைப்போல மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டுத் தெருவில் இழுத்தெறியப்படும் இந்த ராமராஜ்யத்தில் மனதிற்கு மிகவும் வேதனையைத் தரக்கூடிய இப்படிப்பட்ட செய்கையைத் தவிர வேறு எதையும் நாம் காணமுடியாதுதான். வெள்ளைக்காரர்கள்தான் கொடுமைக்கவர்கள், என்று எண்ணினோம். ...ன்று வெறிப்பிடித்த டயர் தன் துப்பாக்கியில் ரவை இருக்கும்வரையில் சுட்டுத்தீர்த்தான், என்றசெய்தியை நாம் கேட்டிருக்கிறோம். ஆனால், அன்றுகூட கல்லக்குடியில் சுட்டதைப்போல் அறுபத்து நான்கு ரவுண்டுகள் சுட்டான் என்றுகிடையாது. இந்தக்காருண்ய அகிம்சாமூர்த்திகளோ, சாத்விகத்தில் தமக்கு நம்பிக்கை இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் இந்தராம ராஜ்ய ஆட்சியாளர்களோ, நிராயுதபாணிகளான கூட்டத்தின்மீது 64 ரவுண்டுகள் சுட்டிருக்கிறார்கள். ஈவு இரக்கமுள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களின் உடல் உள்ளம் எல்லாம் இதைக் கேட்டுச் சிலிர்க்கவில்லையா என்று நான் கேட்கிறேன்.

ஜூலை 15-ம் தேதிதான் இந்த சர்க்காருக்குச் சாவுமணி அடித்த நாள். இந்தச் சர்க்கார் அஸ்தமனம் அடையப்போகிறது என்பதை குறிக்கும் வெடிகுண்டு, ஒலித்த நாள். இந்த அரசாங்கத்தின் வரலாற்றில் ரத்தக்கறை படிந்த நாளாகும். திராவிடரை மிகவும் அவமானப் படுத்தக்கூடிய வகையில் இந்தியப் பிரதம மந்திரி 'சில்லி' என்றும், 'நான்சென்ஸ்' என்றும் சொல்லி வருவதைக் கண்டிக்கும் முறையில் ரயிலை நிறுத்தம் செய்ய தி. மு. க. திட்டமிட்டிருந்தது சர்க்காருக்குத் தெரியும். ரயில் நிறுத்தத் திட்டத்திற்கும் ஆரம்பக்கல்வித் திட்டத்திற்கும் ஏதோ சம்பந்தமிருப்பதாக ஒரு சிலர் குழப்பிக்கொண்டே வருகிறார்கள். அதுவேறு, இதுவேறு விஷயம் என்பதை நான் முன்பு சொன்னதைக் கொண்டு மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

வட நாட்டிலிருந்து தென்னாட்டிற்குச் சுரண்டுவதற்காக வந்த ஒரு முதலாளியின் பெயரை டால்மியாபுரம் என்று தமிழ்நாட்டிலுள்ள ஒரு ரயில் நிலையத்திற்குக் கொடுத்திருப்பது தமிழர்களையே அவமானப் படுத்துவதாக இருக்கிறதென்ற காரணத்திற்காக அந்தரயில் நிலையத்

தின் பெயரை, கல்லக்குடி என்று மாற்றியமைக்கவேண்டுமென்று கலைஞர் கருணாநிதி தலைமையில் தமிழர்கள் போராடினார்கள். இதில் தவறு என்ன? பெயர் மாற்றம் செய்யஎண்ணும் இயக்கத்தை ராஜாஜி 'சில்லி' என்கிறார். காங்கிரஸ்காரர்கள் வெள்ளையர்களின் பெயர் இருக்கக்கூடாதென்று பல இடங்களில் தமிழ்ப் பெயர்களை ஏற்படுத்தவில்லையா? பாங்வெட்டிங் ஹாலிற்கு ஏன்? ராஜாஜிஹால் என்று பெயரிட்டார்கள்? இது அற்பத்தனமல்லவா? சைனாபெஜாருக்கு ஏன் சுபாஷ்சந்திரபோஸ்ரோடு என்று பெயர் மாற்றிவைத்தார்கள் என்று கேட்கிறேன். இவைகள் எல்லாம் சில்லியல்லவா? அதேபோல் டால்மியாபுரம் என்பதை கல்லக்குடி என்று மாற்றவேண்டுமென்பது தமிழர்களின் அவமானம் துடைக்கும் உரிமைப் போராட்டம்.—உரிமைக் கிளர்ச்சி. இந்த உரிமைக் கிளர்ச்சியை நேரு அவர்கள் அவமானப்படுத்திக்கொண்டே வருவதை கண்டிக்கும் முறையில்தான், சிதம்பரம் மாநாட்டில் அதாவது ஜுலை நான்கு, ஐந்தில் நடந்தக் கூட்டங்களில் ஒரு தீர்மானம்போட்டு நிறைவேற்றினார்கள். ஜனங்கள் அமைதியாக பகலில்மட்டும் ரயில் நிறுத்தம் செய்யவேண்டுமென அறிவிப்புகள் செய்திருக்கிறார்கள். அதுவும் 15-ம் தேதி ஒரேநாள்தான். கனம் ராஜாஜீ சர்க்கார் என்ன செய்திருக்கவேண்டும்? தன்மானமிக்கதமிழர்கள்ஒன்று சேர்ந்து போராடப் போகிறார்கள் என்றவுடனேயே நேருவுக்குக் கடிதம் எழுதி அவர்சொன்ன வார்த்தைகளை வாபஸ் வாங்கும்படி செய்திருக்கவேண்டும். ஆனால் முதல் மந்திரி அப்படிப்பட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

காமராஜருக்கும் ராஜாஜிக்கும் மனஸ்தாபம் வந்தபோது, காந்திஜி 'கிளிக்' என்ற வார்த்தையை உபயோகித்ததைக் கண்டிக்க எவ்வளவு கூட்டங்கள் நடந்தது என்பதை யாரும் மறந்திருக்கமாட்டார்கள். அந்தப் பெருந்தன்மைமிக்க உலகத் தலைவர், அந்த வார்த்தையை உடனே வாபஸ் வாங்கிக்கொண்டார். ஆனால், பெருந்தன்மை இல்லாத காரணத்தால், அடிக்கடி தன்னிச்சைப்படி தமிழர்களை இழிவுபடுத்தும் வார்த்தைகளை உபயோகிப்பதும் — தமிழர்கள் வருந்தும்போது அதை வாபஸ் வாங்காது இறுமாப்போடு நேரு இருக்கிறார் அவரது இழிவுபடுத்தும் போக்கை எதிர்க்கவேண்டிய நிலைமையில்தான் நாம் இருக்கிறோம். இந்தக் கிளர்ச்சியில் சாத்வீக முறையில் போராடிய நிராயுதபாணிகளான திராவிட வீரர்களைச் சுட்டிருக்கிறது, இந்த வெறிபிடித்த சர்க்கார். சுடுவதற்கு முன் கண்ணீர்ப்புகை உபயோகிக்கப்படவில்லை. ரயில் போகாதவாறு குறுக்கே படுத்திருந்தவர்களைப் பலவந்தமாக அப்புறம் தள்ள எந்தவிதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளாது, உடனடியாக 64 ரவுண்டுகள் சுட்டிருக்கிறது.

கடந்த ஒரு வாரமாக என்ன நடக்கும் என்பதைப் பத்திரிகை வாயிலாகப் படித்தால் எல்லோருக்கும் தெரியும் என்று சொன்ன கனம்ராஜகோபாலாச்சாரியார், கண்ணீர் புகை ஸ்டாக் வைத்துக் கொள்ள உத்திரவிடவில்லையா? உத்திரவிட்டிருக்கவேண்டாமா? வெறிபிடித்து 64 ரவுண்டுகளா சுடவேண்டும்?

இப்படிச்சாத்வீகமான முறையில் நடத்தப்பட இருந்த ஒரு கிளர்ச்சியின்மீது அசம்பாவிதமான, முன் எச்சரிக்கை எதுவுமின்றித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது மன்னிக்க முடியாத குற்றம் என்பதாக கனம் முதல் மந்திரி ராஜகோபாலாச்சாரியின்மேல் நான் குற்றம் சாட்டுகிறேன்.

கிளர்ச்சி நடத்தஇருந்த அண்ணாவையும், கருணாநிதியையும் இந்த சர்க்கார் சிறையில் அடைத்தது, இன்னும் இதுபோலப் பல ஆயிரக் கணக்கானபேர்கள் சிறையில் கிடக்கிறார்கள். தலைவர்கள் இல்லாதபோது சர்க்கார் பலாத்கார முறையில் போலீஸ் படையின் உதவிகொண்டு சுட்டிருக்கிறது. இதை இன்றைய தினம் விசாரிக்க வேண்டுமென்றால், இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்திற்குக் காரணமாயிருந்தஅதிகாரிகளைக் கொண்டே விசாரணை நடத்தும்படியாக ஏற்பாடு செய்திருக்கிறார். மேலும் கலெக்டர் விசாரிக்கும்போது, பின்னால் சாட்சி சொல்லவேண்டிய கீழ்த்தர அதிகாரிகளும் கூட இருந்திருக்கிறார்கள். இதில் ஏதாவது நியாயமுண்டா? நீதி உண்டாகுமா? ஏன் கனம் ராஜா சிதம்பரம்போன்ற தனிப்பட்ட பிரமுகர்களைக்கொண்ட ஒரு கமிட்டியை நியமித்து விசாரணை நடத்தக்கூடாதா என்று நான் கேட்கிறேன். அரசாங்க உத்தியோகஸ்தர்களைக்கொண்டே விசாரிக்கச் சொல்வதில் நியாயம் கிடைக்காது. கட்சி சார்பற்ற தனிப்பட்ட பிரமுகர்களைக்கொண்டுதான் விசாரிக்கச் செய்யவேண்டும். இது அரசாங்கத்தின் பொறுப்பு என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கல்லக்குடியில் சுமார் பகல் 2 மணிக்குச் சுட்டிருக்கிறார்கள். எனக்கு உடனே மூன்று மணிக்கு ஒரு தந்தி, 3-24 மணிக்கு ஒரு தந்தி, 3-34 மணிக்கு ஒரு தந்தி என்று வரிசையாகத் தந்தி அடித்திருக்கிறார்கள். ஆனால் ஒரு தந்தியாவது எனக்கு அன்றே கிடைக்கவில்லை. ஒரு நாள் கழித்து எனக்குக் கிடைக்கும்படியாக இந்தச் சர்க்கார் செய்திருக்கிறது. இது தான் ஜனநாயகத்தின் போக்கா? இப்படிச் செய்தியை மறைத்துவிட்டால் உண்மை வெளிப்படாமலேயே இருந்து விடுமென்ற எண்ணமா? குடையைக் கொண்டு சூரியனை மறைக்க முடியுமா? இதே மாதிரியாகப் பல செய்திகளைப் பல பத்திரிகைகள்போடவில்லை. தமிழர்களுடைய தன்மானத்தைப் புரிந்துக்கொள்ள வேண்டும். அவர்களது உரிமைக் கிளர்ச்சியை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். வடநாட்டவர்கள் நம்மை இழிவு படுத்திப் பேசுவதை நிறுத்தும்படி செய்யவேண்டும். அதற்குத் தக்க நடவடிக்கை இந்தச்சர்க்கார் எடுக்க வேண்டும்.

மிருகத்தனமாக நடந்துகொண்ட போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகம் நியாயமானதா? இல்லையா என்பதுபற்றி விசாரிக்க உடனே ஒரு தனிபபட்ட பிரமுகர்கள் கொண்ட அதாவது, அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அற்ற — ஒரு கமிட்டியை நியமித்து விசாரணை நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்" எனப் பேசிமுடித்தார்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.